பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 கார்த்திகை 17 திங்கட்கிழமை (03.12.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 07

### தலைநகரில் பதற்றம், களேபரம், குழப்பம்

# வாகனங்கள் வழிமறிக்கப்பட்டு

# வீதிகளில் அலைக்கழிக்கப்பட்டனர் தமிழர்!

## பொது இடங்கள் விசாரணை நிலையங்களாகி உடன் கைது

கொழும்பு,டிசம்பர்.03

தலைநகர் கொழும்பிலும் மற்றும் புற நகரங்களிலும், பல்வேறு இடங்களில் நேற்று பயணிகளின் பஸ்கள் உட்பட சகல வாகனங்களையும் வழிமறித்து பயணித்தோரைத் துருவித் துருவி விசாரித்த பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும், பல நூற்றுக் கணக்கில் - ஆயிரத்துக்கும் மேல் - தமிழர்களைக் கைது செய்து பொலிஸ் நிலையங்களுக்கும் தனியான விசாரணை இடங்களுக்கும் கூட்டிச் சென்றனர்.



இந்தச் சோதனைகளுக்காக தலைநகரிலும் சுற்றுப்புறங்களிலும் பல இடங்களில் வாகனங்கள் சுமார் இரண்டு, மூன்று மணி நேரம் வரிசையில் தவம் கிடந்தமையாலும் அவற்றில் இருந்து இறக்கப்பட்ட தமிழர்கள் கொத்து கொத்தாகக் கைது செய்யப்பட்டு கூட்டிச் செல்லப்பட்ட கொடூரத்தாலும் பெரும் பரபரப்பும் பீதியும் நிலவின.

கொழும்பு நகரின் பல்வேறு சோதனைச் சாவடிகளிலும் வந்த அனைத்து வாகனங்களுமே நேற்று வழிமறிக்கப்பட்டு முழுமையாகச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. பஸ்களிலும் ஏனைய வாகனங்களிலும் பயணித்தோர் துருவித் துருவி ஆராயப்பட்டனர்.

அவர்களில் தமிழர்கள் - குறிப்பாக (08 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தமிழர் அவலம்; புதுடில்லியின் கவனத்துக்கு!

கொழும்பு, டிச. 03

இலங்கையில் - குறிப்பாகக் கொழும்பில் - தமிழ் பேசும் மக்கள் சட்டரீதியான காரணம் ஏதுமின்றி, வகை தொகையில்லாமல் கைதுசெய்யப்படுவதால் எழுந்துள்ள பதற்ற நிலைமை குறித்து கொழும்பில் உள்ள இந்தியத்தூதரகம் புதுடில்லியின் கவனத்துக்குக் கொண்டுவந்திருக்கின்றது.

இந்த நெருக்கடி மற்றும் மோசமான நிலைமை குறித்து மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் நேற்று வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் ஐ.நா. போன்ற அமைப்புகள்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## மக்களின் நலன் சார்ந்த பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அனைத்துத் தரப்பினரும் தியாகம் செய்யவேண்டுமாம்

### கைது நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் ரம்புக்வெல

"தீவிரவாதத் தாக்குதல்கள் காரணமாக பொதுமக்களின் உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில் அரசு மேற்கொள்ளும் எல்லா நடவடிக்கைகளுக்கும் அனைவரும் அனைத்துத் தியாகங்களையும் செய்யவேண்டும்."

- இவ்வாறு பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கொழும்பில் படையினர் மேற்கொண்டு வரும் சோதனை நடவடிக்கைகள் குறித்து அவர் பி.பி.ஸியின் சிங்கள சேவைக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைக்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## வல்வெட்டித்துறையில் கிளைமோர்; சிப்பாய் ஒருவர் பலி; இருவர் காயம்

உடுப்பிட்டி, டிச. 03

வல்வெட்டித்துறை, ஊறணி மீன் சந்தைக்கு அருகாமையில் இராணுவத்தினரை இலக்குவைத்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 8 மணியளவில் கிளைமோர்த் தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இதில் படைச்சிப்பாய் ஒருவர் அந்த இடத்திலேயே பலியானார் என்று கூறப்பட்டது. படுகாயமடைந்த மற்றைய இரு சிப்பாய்கள் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலைக்கு உடனடிச் சிகிச்சைக்காக கொண்டுசெல்லப்பட்டனர்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு அவர்கள் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் அனைவரும் விசாரணைகளுக்கென ஊறணி தீர்த்தக்கரைக்கு அழைத்துச் செல்லப்பட்டு இரவு 11 மணியளவில் வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

(அ-155)

## யாழ். ஆயர் - நடேசன் நேற்றுச் சந்தித்துப் பேச்சு

கிளிநொச்சி, டிச.03

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையின் புதிய பொறுப்பாளராகப் பதவியேற்றிருக்கும் பா.நடேசனை யாழ். மறை மாவட்ட ஆயர் வண. தோமஸ் சௌந்தரநாயகம் நேற்றுக்காலை கிளிநொச்சியில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இருவரும் தமிழர் தாயகத்தில் மனிதநேயப் பணிகள் மற்றும் மனிதாபிமானப் பிரச்சினைகள் குறித்து ஆழமாகப் பேசினர் என்று தெரிவிக்கப்பட்டது.

வன்னி மீதான கண்மூடித் தனமான விமானக் குண்டு வீச்சு, நாடுமுழுவதும் தமிழர்கள் கொல்லப்படுகின்றமை; காணாமற் போகச் செய்யப்படுகின்றமை, கைது செய்யப்படுகின்றமை மற்றும் இலங்கை இராணுவத்தின் கண்மூடித் தனமான ஷெல் மற்றும் விமானத் தாக்குதல்கள் ஆகியவை குறித்தும் இச்சந்திப்பில் பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தமிழர்களின் அவலம் தொடர்பாக சர்வதேச சமூகம் மௌனமாக இருப்பதைச் சுட்டிக்காட்டிய நடேசன், தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசு புரியும் அராஜகங்களைக் கண்டிப்பதற்கு சர்வதேச சமூகம் பெரிதும் பின்னடிப்பதாகவும் கூறினார் எனத் தெரிவிக்கப்பட்டது.

### ✶ முகம் கழுவத் தண்ணீர் இல்லை ✶ மாற்றுடை இல்லை ✶ 150 பேருக்கு 1 மலகூடம்

# அடிப்படை வசதிகள் இன்றி அந்தரிக்கிறார்கள்

# பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்கள்!

கொழும்பு.நவ.03

தலைநகர் கொழும்பிலும் அதனை அண்டிய புறநகரப் பகுதிகளிலும் - தமிழர்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளிலும் கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் கைதுசெய்யப்பட்ட தமிழர்களில் பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 419 பேர் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி அந்தரித்தவண்ணமுள்ளனர்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் மலையக மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டவர்களில் நூறு பேரும் சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டவர்களில் 319 பேரும் பூஸா முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகப் பிந்திய தகவல்கள் தெரிவித்தன.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் பெற்றோர்கள், உறவினர்கள் நேற்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரனின் ஏற்பாட்டில் மதியம் பூஸாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

கதறி அழுதனர் உறவினர்கள்

ஐந்து பெரிய வாகனங்களில்

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்






23.11.2007 அன்று பண்டாரநாயக்கா சர்வதேச மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா கற்கைநெறிக்காக (HNDA) பட்டம் பெற்ற சதாபொன்ஸ் குடும்பத்தைச் சேர்ந்த

தங்கவேலாயுதம் பாலமுரளி
சுந்தரலிங்கம் சுதர்ஸன்
தங்கவேலாயுதம் அகிலன்
கைலாசபதி ஜெயகாந்தன்

ஆகியோரை மகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அல்வாய். (சி/54581) சதாபொன்ஸ் சமூகம்.

# காவேரியின் மாபெரும் மலிவு விற்பனை

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு
01.12.2007 முதல்
**காவேரியின்**
**"மாபெரும் மலிவு விற்பனை"**
"பாதிக்குப்பாதி விலையில்"
கொட்டன் சாறி பிரியர்களுக்குக் கொண்டாட்டம்
சாறி, சல்வார், சோளிகிட், சேட், சூட்டிங் சிறுவர் சிறுமியர்களுக்கான உடுப்பு வகைகள்
அனைத்தையும் அள்ளிக் கொள்ள காவேரி சில்க்ஸ்
குறிப்பு : ஞாயிற்றுக் கிழமைகளிலும் கடை திறந்திருக்கும்



(சி/54586)

**48, பெரியகடை, யாழ்ப்பாணம்.**

# கலாலயா

பயிற்சியகம்
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)
மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

## விடுமுறைக் கால 3 வார வகுப்புக்கள்

பாடசாலை ஆசிரியைகள், மாணவிகள் மற்றும் மகளிருக்குமானது.

- பப்றிக் வர்ணம் தீட்டுதல்
- பூ வேலை
- கைவேலை
- கூந்தல் அலங்காரம்
- அடிப்படைத் தையல்
- சாறிபிளவுஸ், சுரிதார், Skirts தைத்தல்
- அடிப்படை Facial அழுக்கலை மற்றும் மணப்பெண்கள் அலங்காரம்

**ஆரம்பம் – 10-12-2007 திங்கள் காலை 9.00 மணி**

மேலும் விபரங்களை பி.ப 1.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.
பதிவாளர்.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ.03

வாகனசுத்திகரிப்பு நிலைய உரிமையாளர்கள் மற்றும் தொழிலாளர் களுக்கான விழிப் புணர்வுக்கருத்தரங்கு ஒன்று நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்குகோட்டாய்சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம் பெறவுள்ளது.

இதில் அனைவரையும்கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சின்னத்தம்பி இரத்தினசிங்கம்**

தோற்றம்
18.03.1940

மறைவு
14.12.2006

எமது குடும்ப விளக்காய் வைத்துள்
வாழ்வாங்கு வாழ்ந்து அழகானந்த ஜோதியாய்
சங்கமித்த எமது தந்தையாரின் நினைவு
எம் அனைவரினதும் உள்ளங்களில் இருந்தும் மறையவில்லை.

*யாமாச்சந்தி,*
*உடுவில் தெற்கு,*
*மானிப்பாய்.* (68536) குடும்பத்தினர்.

# மிருசுவில் புனித நிக்கொலஸ் ஆலய பெருவிழா- 2007



மிருசுவிலில் கோயில் கொண்டுள்ள புனித நிக்கொலஸ் மாமுனிவரின் வருடாந்தப் பெருவிழா இம்முறை மிருசுவில் பதியில் கொண்டாடப்படவுள்ளது.

**விழா ஏற்பாடுகள் பின்வருமாறு**

2007.12.04 (செவ்வாய்) பி.ப.2 மணிக்கு - ஆரம்பநாள் வழிபாடு
2007.12.05 (புதன்) பி.ப. 2 மணிக்கு - நற்கருணை விழா
2007.12.06 (வியாழன்) காலை 8 மணிக்கு - பெருவிழாத் திருப்பலி

அனைவரையும் வழிபாடுகளில் கலந்து அமைதியும், சுபீட்ச வாழ்வும் எம் மண்ணில் துளிர்க்க இறையாசியையும் புனிதரின் பரிந்து பேசுதலையும் யாசிக்க அன்புடன் அழைக்கின்றோம்.

பங்குத்தந்தையும், பங்குமக்களும்,
மிருசுவில். (68526) புனித நிக்கொலஸ் ஆலயம்.

# முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை வகுப்புகள்

*திங்கள், செவ்வாய் 1.00 - 4.00*
*புதன், வியாழன் 9.00-3.00*

**யாழ்ப்பாண கல்லூரி**
**பட்டப்படிப்புகள் பிரிவு**
(யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக)

# மலிவு! மலிவு! மலிவு! மலிவு! மலிவு!



கிறிஸ்மஸ், புதுவருடத்தினை முன்னிட்டு
மலிவு விற்பனை
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க
**கிறிஸ்மஸ், புதுவருட**
விசேட கழிவு விற்பனை 01.12 - 31.12
விசேட கழிவு சகல பொருள்களுக்கும் வழங்கப்படும்

**லைடன் புடவை நிலையம்**
இல. 410, ஆஸ்பத்திரி வீதி, (பஸ்நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.

# தலைமைத்துவமும் ஊழியமும் கருத்தரங்கு

பேச்சாளர் வண.டேவிற் பெர்ணாண்டர்ஸ், ஆஸ்திரேலியா Harvest Bible College இல் இறையியலில் பட்டம் பெற்றவர். மெல்பேன் Calvary Worship Centre இனது ஸ்தாபக போதகராவார். இவர் ஆஸ்திரேலியாவிலும் இலங்கையிலும் பல சபைகளை நிறுவியுள்ளார். இவர் கடந்த 19.06.2007 இல் நம்மத்தியில் நடத்திய கருத்தரங்கு மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. போதகர்களிலும் தேசங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்ற இக்கருத்தரங்கில் பங்குகொள்ள விரையுங்கள்.

காலம்: 06.12.2007 வியாழக்கிழமை மு.ப. 9 மணியிலிருந்து பி.ப.3.00 வரை
இடம்: அசெம்பிளி ஒப் கோட், 14, இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம்.

(68537) **யாழ்.மாவட்ட ஒன்றியம்.**

# அறிவித்தல்

யா/மெதடிஸ்த பெண்கள்
உயர்தர பாடசாலை பழைய
மாணவர்சங்கப் பொதுக்கூட்டம்
இடம்: பாடசாலை மண்டபம்
காலம்: 09.12.2007
ஞாயிற்றுக்கிழமை
மு.ப.9.30 மணி
அனைத்து பழைய
மாணவர்களையும் தவறாது
சமுகம் தருமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

செ.சுந்தரேசன் த.வேலுப்பிள்ளை,
தலைவர். செயலாளர்.

பழைய மாணவர் சங்கம்,
யா/மெதடிஸ்த பெண்கள்
உயர்தர பாடசாலை,
பருத்தித்துறை. (சி/54585)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வேலுப்பிள்ளை மங்கையர்க்கரசி

மாணிக்கதியாகராஜ வீதி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கற்பிட்டியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலுப்பிள்ளை மங்கையர்க்கரசி 30.11.2007 அன்று வவுனியாவில் காலமானார்.

அன்னார் அமரர் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் வசந்தா, சாரதா, வனிதா, சுகிர்தா, அமிர்தா, அனுரா, நந்தசேனா, விஜயசேனா, தர்மசேனா ஆகியோரின் அன்புத் தாயாரும் குகனேஸ்வரராசா, நவநாதன், கனகநாயகம், கர்ஜினி, விமலா, இலக்குமன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (04.12.2007) செவ்வாய்க்கிழமை இல.5 தேசிய வீடமைப்பு அதிகார சபை(வவுனியா) விடுதியில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தச்சனாமருதங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, வவுனியா.* (68542) வ.கனநாயகம் (மருமகன்)

# மரண அறிவித்தல்

## குணசிங்கம் றமேஷ்



கோப்பாய் மத்தி, வெள்ளருவப் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த குணசிங்கம் றமேஷ் (01.12.2007) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற குணசிங்கம் மற்றும் செல்லமணி தம்பதியினரின் அன்பு மகனும், கவிதாவின் அன்புக் கணவரும், ராதிகா, றஜீவன், தனுசிகா ஆகியோரின் அன்பு தந்தையும் காலஞ்சென்ற ரகுபாலன், ராஜ்மோகன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நடராஜா- பங்கையராணி தம்பதியரின் அன்பு மருமகனும், நகுலேஸ்வரன், சுவேந்திரன், சுரேஸ்குமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2007)திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*பிள்ளையார் கோயிலடி, கோப்பாய் மத்தி.* (68539) மனைவி (கவிதா).

# கண்ணீர் அஞ்சலி

எமது வடபிராந்திய உதவிப்
பொதுமுகாமையாளர்
**B.A.அருமைநாயகம்**
அவர்களின் அன்புத் தாய்
**திருமதி**
**திரேசம்மா பொனிபஸ்**
அவர்களுக்கு எமது கண்ணீர்
அஞ்சலியைச்
செலுத்துகின்றோம்.

**முகாமையாளர்களும்**
**ஊழியர்களும்,**
**இலங்கை வங்கி,**
**பருத்தித்துறை.**

## அருளப்பு பிலிப்பையா



23/3, 5ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அருளப்பு பிலிப்பையா நேற்று (02.12.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசேந்தி அருளப்பு, எலிசபெத் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற சற்குணத்தின் கணவரும் தெய்வராணியின் அன்புத் தகப்பனும்நேசம்மா(கனடா),திரேசம்மா(கொழும்பு), ராசம்மா(கொழும்பு), காலஞ்சென்றவர்களான மேரிமக்ரலின், இராசேந்திரம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(03.12.2007) திங்கட்கிழமை பிற்பகல் 3மணியளவில் அவரின் இல்லத்தில் இருந்து அடைக்கல அன்னை ஆலயத்துக்கு இரங்கல் திருப்பலிக்காக எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*23/3, 5ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.* (68540) மகள், சகோதரிகள், மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இடம்பெற்ற சர்வதேச சிறுவர், முதியோர் தின விழாவில் பிரதம எழுதுவினைஞர் செல்வி ம.அன்ன பாக்கியம் மாணவர் ஒருவருக்கு பரிசாக துவிச்சக்கரவண்டியை வழங்கு வதையும், 'அசெம்பிளி ஒவ் கோட்' ஜி.ஜே.அமலதாஸ் முதியோர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் எஸ்.சதாசிவம் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் :லக்ஸ்மன்)

## இரண்டு வீடுகள் மீது கிரனேட் வீச்சு!

வடமராட்சியில் இரு இடங்களில் மக்களின் வீடுகள் மீது நேற்றுமுன்தினம் அதி காலை கிரனேட் வீச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன.

கரவெட்டி வடக்கு, ஆலங்கட்டையில் உள்ள வீடு ஒன்றின் மீதும் அல்வாய் தெற்கு, ஜயிட்டிபுலம் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீதும் இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஆலகட்டையில் உள்ள ஒருவரின் வீட்டிற்கு அதிகாலை சுமார் 4.50 மணியளவிலும் அல்வாய் தெற்கில் உள்ள வீட்டிற்கு அதன் பின்னரும் கைக்குண்டுகள் வீசப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் மோட்டார் சைக்கிளில் சென்றவர்களே கிரனேட் வீசியதாகவும் கூறப்பட்டது.

இரண்டு வீடுகளும் சேதமடைந்த பாதிக்கப்பட்ட வீடுகளின் உரிமையாளர்கள் நெல்லியடி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (அ-1-155)

## வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் 45 திட்டங்களுக்கு 19.4 மில்லியன் ரூபா நிதி

### 'கமநெகும' திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு

கரவெட்டி,டிசெ.3

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் 'கமநெகும' திட்டத்தின் கீழ் 45 வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கென 19.4 மில்லியன் ரூபா. நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தெரிவித்தார்.

மிகவும் பின்தங்கிய 17 கிராமங்களில் இத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தத் திட்டங்களின் கீழ் மலசலகூடங்கள் அமைத்தல், சுயதொழிலுக்கான உதவிகள் வ'ழங்கல், சனசமூக நிலையங்களுக்கான உதவிகள் வழங்கல், முன்பள்ளிகளுக்கான தளபாடங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் பெற்றுக்கொடுத்தல், பொதுக் கிணறுகள், வடிகால்கள் புனரமைப்பு போன்ற பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இத்திட்டங்கள் யாவும் இந்த ஆண்டு நிறைவடைவதற்கு முன்னர் மேற்கொள்ளப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ளதாகவும் தற்போது 9.7 மில்லியன் ரூபா மட்டுமே கிடைத்துள்ளதாகவும் பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

வருடம் நிறைவடையும் நிலையில் திட்டங்கள் ஒதுக்கப்பட்டு விரைவில் அவை நிறைவு செய்யப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ளமை பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

எனவே இவ்விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனம் எடுத்து உரிய கால அவகாசம் வழங்க முன்வரவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

(203-70)

## புகையிலை, வெங்காயச் செய்கைகளில் விவசாயிகள் நாட்டம் காட்டவில்லை

யாழ்ப்பாணம்,டிசெ.3

வலி.கிழக்கு பிரதேச விவசாயிகள் இம்முறை புகையிலை மற்றும் வெங்காயச் செய்கையில் அதிக நாட்டம் காட்டவில்லை என்று விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

தென்பகுதிக்கு இப்பொருள்களின் ஏற்றுமதியின்மை மற்றும் குடாநாட்டில் வெங்காயத்தின் விலை வீழ்ச்சி போன்றனவே இதற்குக் காணரம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

அத்துடன் ஏற்றுமதியின்மை காரணமாகப் பெருமளவான வெங்காயம் அழுகி வீணாகிப் போனமையும் தோட்டங்களில் இருந்த அவை பிடுங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பு மற்றும் பசளை, கிருமிநாசினி களின் விலை உயர்வு போன்ற காரணத்தா லும் விவசாயிகள் மேற்கண்ட பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்கு பின்நிற்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-224)

## நிகழ்வுகள்

வலி.வடக்கு,டிசெ.3

மாற்று ஆற்றலுள்ளவர்களின் தின நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

(203-86)

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.3

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளையின் பரப்புரைக் கூட்டம் இன்று காலை 9 மணிக்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடைபெறவுள்ளது.

(203)

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.3

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் மானிப்பாய் கிராம உப அலுவலகம் தனது நிர்வாகத்துக்குட்பட்ட பிரதேச மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கென இன்றும் நாளையும் காலை 9 மணிமுதல் பிற்பகல் 3.30 மணிவரை ஜீ.சீ.ஈ. சாதாரண மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்றினை ஆனைக்கோட்டை பொதுநூலகத்தில் நடத்தவுள்ளது. இதில் கணிதம், தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம், சமூகக் கல்வி ஆகிய பாடங்களுக்கான வழிகாட்டல் விரிவுரைகள் யாழ்.மாவட்ட முன்னணி ஆசிரியர்களினால் வழங்கப்படவுள்ளமையால் ஆர்வமுள்ள மாணவர்கள் பங்குபற்றிக் பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (203)

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.3

திருமறைக் கலாமன்ற தினம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு இலங்கையிலும் உலகநாடுகள் பலவற்றிலும் உள்ள திருமறைக் கலாமன்றங்களில் பல்வேறு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் யாழ். திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் காலை 7 மணிக்கு நன்றி வழிபாடும் மாலை 3 மணிக்கு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. நன்றி வழிபாடு இல. 125, டேவிற் வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைக் கோட்டத்திலும் கலை நிகழ்வுகள் இல. 285, பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்திலும் இடம்பெறவுள்ளன.

மன்றத்தின் நிர்வாக சபை உறுப்பினர் எஸ்.சாமிநாதர் தலைமையில் நடைபெறவுள்ள மாலை நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருள் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரும் சிறப்பு விருந்தினராக யாழ்.பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூவும் கலந்துகொள்வர். (203-51)

## இளவாலையில் விபத்து; விளையாட்டு வீரர் காயம்

வலி.வடக்கு,டிசெ.3

இளவாலையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 5.30 மணியளவில் இடம்பெற்ற போக்கு வரத்துச் சபை பஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

இளவாலை மெய்கண்டான் வித்தியாலயத்தில் நடந்த போட்டி ஒன்றில் கலந்து கொண்டுவிட்டு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த அருள் என்ற விளையாட்டு வீரரே காயமடைந்தவர் ஆவார்.

அவர் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின் யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார். (1-86)

## பரீட்சார்த்திகளுக்கு இன்று செயலகத்தில் நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.3

பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப் பட்ட அரச பொது முகாமைத்துவ உதவியாளர் தரம் II இற்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகத் தேர்வில் சமுகமளிக்காத 20 பரீட்சார்த்திகளுக்கு இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் நேர்முகத் தேர்வு இடம்பெறவுள்ளது.

ஒக்ரோபர் 9ஆம் திகதி இந்த நேர்முகத் தேர்வு கொழும்பில் இடம்பெற்றது.

இதில் சமுகமளிக்கத் தவறியவர்களின் பெயர், விவரங்கள் வருமாறு-

ரி.பிரபாகரன்(மீசாலை), என்.சிவநயனா(ஆனைக்கோட்டை), வி.விஜயலதா (புங்குடுதீவு),ரி.வினுஜா(அச்சுவேலி), எஸ்.ஜெனோதினி(திருநெல்வேலி), ரி.கீர்த்தனா (மீசாலை), கே.மனோரஞ்சிதம் (காரைநகர்), எஸ்.ஜே.நிரோஜன்(வட்டுக்கோட்டை), ஜி.சிவறஞ்சினி(புலோலி), பி.துஸ்யந்தினி(பருத்தித்துறை), பி.செல்வகுமார்(நல்லூர்), ஐ.சர்மிலா(மல்லாகம்), எஸ்.குகசீலன்(கரவெட்டி), எஸ்.சிவதீபா (மிருசுவில்), எஸ்.தீபாக்(பண்டத்தரிப்பு), ஆர்.பகீரதன்(புலோலி), வி.சுகந்தி (திருநெல்வேலி), பி.தீனுகா(கொக்குவில்), பி.நிவேதிகா(யாழ்ப்பாணம்), எஸ்.சிவப்பிரியா (கரவெட்டி). (203)

## வாசகர் திருமுகம்

### இந்தப் பாதைகளைத் திருத்தவே மாட்டார்களா?

மானிப்பாய் பட்டின சபை நிர்வாக எல்லைக்குள் இருக்கும் மானிப்பாய் - இந்துக் கல்லூரிக்கு அருகில் இது சங்கரப்பிள்ளை வீதியில் இருந்து கிழக்குப் பக்கமாகச் செல்லும் கல்லூரி வீதி. இப்பாதை யாழ்ப்பாணம் - ஆனைக்கோட்டை வீதியுடன் தெற்கே கட்டாபாலி ஒழுங்கையுடன் கூழாவடி ஆனைக்கோட்டையுடன் இணைகின்றது. இப்பாதையைச் செப்பனிடுவதற்கு எத்தனையோ தரம் இவ்வூர் மக்களால் பல தடவை எழுதிக் கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் ஒருவரும் எடுக்கவில்லை. எத்தனையோ தரம் பாதையை அளந்து எடுத்துக் கொண்டு போனதே தவிர இப்பாதையை செப்பனிடுவதற்கு அவர்கள் முன்வரவில்லை அசட்டையாக இருக்கிறார்கள்.

40 வருடத்திற்கு மேலாக கொலிச் வீதியும் கட்டாபாலி ஒழுங்கையும் எவ்வித கவனிப்பும் இன்றி குண்டும் குழியுமாக காட்சியளிக்கின்றது. இப்பாதையூடாக மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி , சென்.ஆன்ஸ் பாடசாலை, ஆசிரிய பயிற்சிக் கல்லூரி என மிக முக்கியமான போக்குவரத்து மாணவர்களின் பாதையாகும். மழை காலங்களில், இவ்வீதியால் செல்லமுடியாது பெரும் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றது. பாடசாலை செல்லும் மாணவ, மாணவியர், ஆசிரியர்கள் பாதசாரிகள் என எல்லோரும் பாவிக்கும் முக்கியமான பாதையில் செல்லும் மாணவியர் பாதணிகளை கழற்றி கையில் எடுத்துச் செல்லும் நிலையிலும் சைக்கிளில் செல்லுபவர்களுக்கும் வெள்ளம் தெறித்து சீருடைகள் எல்லாம் சேறுகள் படிந்து கொண்டுசெல்வதையும் நாளாந்தம் காணக்கூடியதாக உள்ளது. ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்குச் செல்லும் ஆசிரியர், ஆசிரியைகள் தங்கள் வாகனங்களைச் செலுத்திச் செல்லமுடியாமல் இறங்கி உருட்டிச் செல்வதையும் நாளாந்தம் காணக்கூடியதாக இருக்கிறது.

இதில் என்ன வென்றால் மானிப்பாய் பட்டின சபை 500 மீற்றருக்குள்தான் இருக்கிறது. இவர்களிடம் பலமுறை தெரிவித்தும் எந்தவித பலனும் கிடைக்கவில்லை. அவர்கள் இதில் எந்தவித அக்கறையும் இல்லாமல் இருக்கிறார்கள். கூடிய விரைவில் இப்பாதையைச் சீர்செய்வித்துத் தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

*மானிப்பாய்.* பொதுமக்கள்.

### அறிவிப்புகளும் நடைமுறை நிலைமைகளும்

2007.11.14 ஆம் திகதிய பத்திரிகையில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் 'மின்வெட்டில் எந்தவித பாரபட்சமுமின்றி அமுல்படுத்தப்படுவதாகவும் சில இடங்களில் அது தவிர்க்க முடியாத காரணத்தால் தளர்த்தப்பட்டுள்ளதாகவும்' தெரிவித்திருந்தார் என தாங்கள் பிரசுரித்திருந்தீர்கள். ஆனால் உண்மைநிலை தங்களுக்கே தெரியும். மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையிலிருந்து வலிகாமம் தென்மேற்கு, வலிகாமம் மேற்கு மற்றும் தென்மராட்சிப் பகுதிகள் மற்றைய இடங்களுடன் ஒப்பிடப்படும் போது இலங்கை மின்சாரசபையின் (யாழ்.மாவட்டம்) மிக மோசமான மின்வெட்டுக்கு ஆளாகியிருந்ததனை இங்கே இவ்விடயம் சார்பில் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். எனவே அரசாங்க அதிபர் இவ்வாறு செய்தி வெளியிட்டிருப்பது எங்களை திகைப்புக்குள்ளாக்கியுள்ளது. அத்தோடு, மக்களின் பிரச்சினைகளைத் தெளிவாகவும் துணிவாகவும் சொல்லும் தங்களின் பத்திரிகைகூட இவ்விடயம் தொடர்பாக ஆசிரியர் குறிப்பு எதனையும் கூறாமல் மௌனியாக இருந்தமையும் கூட எங்களை மிகவும் வேதனைக் குள்ளாக்கியிருந்தது.

யாழ்.அரசாங்க அதிபரால் பத்திரிகையில் பொருள்களின் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக அடிக்கடி செய்தி வரும். அது பத்திரிகையில் மட்டும்தான். உண்மையில் நடைமுறையில் நிலைமை வேறு. நான் எழுதும் இக்கடிதத்திற்குக் கூட அரச அதிபர் சார்பில் மறுப்புத் தெரிவிக்கப்படலாம். ஆனால் உண்மை நிலைமையினை யாழ். மாவட்டத்தில் வசிக்கும் ஒவ்வொரு மக்களும் புரிந்து கொள்வார்கள். உதாரணத் திற்கு சன்லைற் சவர்க்காரத்தின் கட்டுப்பாட்டு விலையாக ரூபா 26/= நிர்ணயிக்கப்பட்டிருந்ததாகப் பத்திரிகைச் செய்தி கூறியது. ஆனால் சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பிரதேச கிளைகளின் ரூபா 28/= விற்பனை செய்யப்பட் டது. இருப்பில் இருக்கும் பால்மா தொடர்பில் ஐயா விலை நிர்ணயம் செய்து அறிக்கை விட்டார். ஆனால் நிலைமையென்ன? யாழ்.மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங் கள் எல்லாம் - தனியாரை விட்டு விடுங்கள் - பால்மாவினை பதுக்கி வைத்துவிட்டார்கள். எனவே யாழ். மாவட்ட மக்களுக்கு ஒன்று மட்டும் இன்று தெளிவாகத் தெரியும். பத்திரிகையில்தான் அரசாங்க அதிபரால் மேற்கூறியவற்றினைத் தெரிவிக்கமுடியும். ஆனால் நடைமுறையில் நிலைமை வேறு. இவ்விடயங்கள் தொடர்பில் உண்மையினைத் தங்கள் பத்திரிகை சார்பில் ஆராய்ந்து பாருங்கள் எனது உள்ள குமுறலின் நிதர்சனம் புரியும்.

*[illegible] சுதிபுரம்.* சி.கந்ததாசன்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வசீகர தோற்றத்திற்கு

# சந்தனாலேப

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)



யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REGNO A/L 250


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிழக்கு பல்கலைக்கழகத்தில் 03.11.2007 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற
அரியதுரை கவிதா B.A
அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ்வில் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

சோமரத் தோட்டம், உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

பெற்றோர், சகோதரர்கள், ராமதாஸ் - அஞ்சனா (லண்டன்).

(68520)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் ஆறுமுகம் சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற ஊழியர், யாழ்.போதனா வைத்தியசாலை)

மலர்வு 20 ★ 10 ★ 1933
உதிர்வு 03 ★ 11 ★ 2007
திதி: 03.12.2007

நீங்கள் எம்மைப் பிரிந்து
திங்கள் ஒன்று ஆனாலும்,
தீராது எம் துயரம் - எம்
நினைவில் வாழ்விர்கள் நிதமும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஞான வைரவர் வீதி, உரும்பிராய் கிழக்கு.

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

(68513)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

938 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

இடபம் 03 35 45 55

30-11-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 5342371 - 5357561

ஜக்பொட் பரிசு ரூபா. 1,755,050/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 334,852 | 10/- | 3,348,520/- |
| 2 இலக்கங்கள் | 30,736 | 20/- | 614,720/- |
| 1 இல. + லக்கினம் | 30,377 | 30/- | 911,310/- |
| 2 இல. + லக்கினம் | 2,780 | 100/- | 278,000/- |
| 3 இலக்கங்கள் | 818 | 500/- | 409,000/- |
| 3 இல. + லக்கினம் | 85 | 5,000/- | 425,000/- |
| 4 இலக்கங்கள் | 5 | 100,000/- | 500,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,755,050/- | - |
| மொத்தம் | | | 6,486,550/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 399,658 | | 7,510,050/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,502,750/-

தொடர் இல:4468546 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2007 டிசெம்பர் 04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கண்டி | 5352743-7-52 |
| கொழும்பு | 5350459-5-30 |
| இரத்தினபுரி | 5354459-0-89 |
| நுவரெலியா | 5354378-7-49 |
| மொனராகலை | 5354361-9-41 |



## I.D.D. அழைப்புகளுக்கு!!

எந்த ஒரு தொலைபேசியில் இருந்தும் உங்கள் இல்லங்களில் இருந்த வண்ணமே வெளிநாட்டு அழைப்பு களை பெற்றுக்கொள்ள 3/=

29 A, 2nd Chappel Lane, Colombo 06,
0773993650


## தவறிவிட்டது

லயன்ஸ் கழகத்தினரால் கொழும்பில் இருந்து விமானமமூலம் 27.10.2007 அன்று அனுப்பப்பட்ட பாடசாலைக்குரிய கேடயங்கள் அடங்கிய இரு பெட்டிகள் தவறுதலாக மாறிக் கொடுக்கப்பட்டுள்ளது. பெற்றுக் கொண்டவர்கள் தயவு செய்து M/S V.K.RAJARATNAM, 2C, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கும்படி தயவாக கேட்டுக்கொள்கிறோம்.
T.P 222 2056 (68493)

## தேவை

* படப்பிடிப்பாளர்
* வடிவமைப்பாளர்

(PHOTO SHOP)
மூர்த்தி கலர் லாப்
62/17, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(68525)

## தவறிவிட்டது

பாரதிவீதி, சங்கானை என்னும் முகவரியைச் சேர்ந்த சிவராசா சுதர்ஸன் என்பவரது தேசிய அடையாள அட்டை (832063819 V) 30.11.2007 அன்று மாகியப்பிட்டி சந்திக்கும் சீரணி சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (சன்மானம் வழங்கப்படும்.

பொ.சிவராசா (சண்முகம்)
வீரபத்திரர் கோயிலடி, சண்டிலிப்பாய்.
T.P.No 0779688019

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAIRAHA புறோயிலர் குஞ்சுகள் 03.12.2007 மாலை விநியோகிக்கப்படும் பதிவுகளை மேற்கொள்ளவும்.

- றாஜிவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
- P. ரவி, தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
- மதுரா, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
- திருமகள் களஞ்சியம்,சிவலிங்கப்புளியடி.
- அனைத்து கால்நடைச் சங்கக் கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

(68479)

## பெரதேனியா கல்வி நிலையம்

கொக்குவில் மேற்கு, கொக்குவில்

புதிய கல்வி ஆண்டு - 2008
தரம் 01 முதல் O/L வரை
புதிய வகுப்புகள் ஆரம்பம்
05.12.2007 புதன்கிழமை
மாலை 3.30 மணி
எமது ஆசிரியர் குழு

| | |
|---|---|
| கணிதம் | S.முரளி, S. வசந்தராஜ் |
| விஞ்ஞானம் | :- S.பிரகாஸ் |
| தமிழ் | :- L.சுகன்யா |
| ஆங்கிலம் | :- S.கிரிதரன் |
| வரலாறு | :- Y. அனுசியா |
| வணிகக்கல்வி | :- K.அற்புதராஜா |
| சுகாதாரம் | :- S. நிசாந்தினி |

புதிய அனுமதிகளை இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்,
(68530) நிர்வாகி.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பு இராசரத்தினம்



வேலணை மேற்கு சிற்பனைமுருகன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் தற்போது லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பு இராசரத்தினம் (30.11.2007) வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பு-வள்ளியம்மை (தங்கம்மா) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வல்லிபுரம்-பூரணம் தம்பதியரின் அருமை மருமகனும், சுந்தரவல்லியின் அன்புக் கணவரும், சிவதாஸ் (U.K), சுமதி (U.K), குகதாஸ் (Canada), ஜெயமதி (U.K), ரூபமதி (U.K), தேவதாஸ் (U.K) ஆகியோரின் பாசமிகு தந்தையும் றசீகலா (U.K), குலேந்திரன் (U.K), திருமதி குகதாஸ் (Canada), மோகன் (U.K), முருகானந்தன் (U.K), ராஜினி (U.K) ஆகியோரின் அன்பு மாமனும் இராஜசேகரம் (அமரர்), சிவஞானம்மா (U.K), மகாலிங்கம் (Jaffna), தங்கரத்தினம் (அமரர்), அன்னலட்சுமி (Colombo), சிந்தாமணி (U.K) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சேனாதிராஜா, தங்கராஜா, செந்தில்நாதன், பாலதுரை மற்றும் செல்வமலர் (Jaffna), தவமணிதேவி (Jaffna) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (05.12.2007) புதன்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 25, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சி.சிங்கலிங்கம் (தம்பி),
ம.திலைவேந்தன் (மைத்துனர்)

## 31ம் நாள் நினைவலைகள்

தோற்றம் 22 • 05 • 1942



மறைவு 03 • 11 • 2007

கடந்த 03-11-2007 சனிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

அமரர் பொன்னம்பலம் கார்த்திகேசு

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 03-12-2007 திங்கட்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்போடு அழைக்கின்றோம்.

நன்றி

கட்டுப்பலானை, கோப்பாய் வடக்கு.

இங்ஙனம் குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் சக
ஆசிரியர் தி.சுகுமாரன் அவர்களின்
அன்புத் தந்தை சபாபதிப்பிள்ளை தியாகராசா
அவர்கள் அமரரானமையினால் துயரமடைந்திருக்கும் ஆசிரியருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைப் பகிர்ந்து கொள்வதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் ஊழியர் நலன்புரிச் சங்கம்
யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, வல்வெட்டித்துறை. (68509)


## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் சக ஆசிரியை
திருமதி சிறிசிவராணி கிருஷ்ணகுமார்
அவர்களின் அன்புத் தந்தை
இராமலிங்கம் கந்தசாமி
அவர்கள் இறைபதம் எய்தியமையினால் துயருற்றிருக்கும் ஆசிரியைக்கும் அவரது குடும்பத்தினர்க்கும் எமது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அமரரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் குழாம்
யா/ உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, வல்வெட்டித்துறை

(68508)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
ஆறுமுகம் கந்தையா
(Retd. D.R.O. Head Quarters, District Secrerariat, Jaffna)

மலர்வு 12 - 02 - 1919
உதிர்வு 15 - 12 - 2006

எமது வாழ்விற்கோர் விடிவகலாய் ... நல் வழிகாட்டியாய்...
எம்மை அன்புடனும், பாசத்துடனும் பேணி வளர்த்து...
வாழ்வாங்கு நாம் வாழ வழிகாட்டிய - எமது
அன்புத் தெய்வத்தின் நினைவுகள் என்றும் வாழும் எம்முடன்!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!


"ஸ்ரீ பிருந்தாவனம்"
37/1, வைமன் வீதி, நல்லூர்.

-குடும்பத்தினர்.

(68501)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 18 ★ 05 ★ 1955



உதிர்வு 15 ★ 12 ★ 2006

அமரர் பொன்ராசா குணசேகரம்
(குணம்)
03.12.2007

அன்போடும் பாசத்தோடும் எமை வளர்த்து
அவனியில் நாமுயர அரும்பாடு பட்டீரே!
ஆண்டொன்று கடந்து போனாலும்
ஆறாது அப்பா எங்களின் மனக்கவலை.

82, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (68495) -குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'புலிகளின் குரல்' மீதான தாக்குதல்: சுதந்திர ஊடக அமைப்புக் கண்டனம்

கொழும்பு, டிச.01

''இலங்கையில் கருத்துச் சுதந்திரத்துக்கெதிராக அரச அமைப்புகளும் இராணுவமும் கடைப்பிடித்து வரும் கெடுபிடி நடவடிக்கைகளுக்கு சுதந்திர ஊடக அமைப்பு ஆட்சேபனையும் அதிர்ச்சியும் தெரிவித்துள்ளது.''

இதுகுறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

நவம்பர் 27 ஆம் திகதி இலங்கை விமானப் படையினர் தமிழீழ விடுதலைப் புலிகளின் வானொலி நிலையம்மீது மேற்கொண்ட தாக்குதல்களும் - ஐந்து ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டமையும் கண்டனத்துக்குரியவை.

இந்த வானொலி நிலையம் ஒரு சிவிலியன் நிறுவனம், இராணுவ நிறுவனமல்ல. இது வெளிப்படையான ஓரிடத்தில் அமைந்துள்ளது. இதனை அறிந்துணர்ந்து கொண்டதனாலேயே கடந்த காலங்களில் எந்த ஓர் அரசும் இதன்மீது தாக்குதல் நடத்தவில்லை.

ஜெனிவா உடன்படிக்கை சிவிலியன்களின் நிறுவனங்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதலைத் தடைசெய்கிறது. இந்த நிலையில் இந்த நிலையம் மீதான தாக்குதலானது சிவிலியன் நிறுவனங்கள் மீதான தாக்குதலாகவே கருதவேண்டியுள்ளது.

ஊடகவியலாளர்களும் சிவிலியன்களாகவே கருதப்படவேண்டியவர்கள். இவர்களுக்கான தகுந்த பாதுகாப்பை பொறுப்பாளர்கள் அளிக்கவேண்டும் என்றும், அந்த உடன்படிக்கை மேலும் தெளிவுபடுத்தியுள்ளது.

இதேவேளை, மாகாணமட்ட ஊடகவியலாளர்களும் சுதந்திரமாகவும் சரியாகவும் செய்திச் சேவைகளை மேற்கொள்ள முடியாதுள்ளார்கள். பொலன்னறுவை மாவட்ட ஊடகவியலாளர் கமகே, செய்திச் சேகரிப்பில் ஈடுபட்ட சமயத்தில் பொலன்னறுவை தம்மான்கடுவ உள்ளூராட்சி மன்றத் தலைவரால் மிரட்டப்பட்டுள்ளார்.

கமகே, இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும். ஊடகவியலாளருக்கு நேரடி அச்சுறுத்தலாக பத்திரிகைத் தணிக்கையை ஓர் அரச அதிகாரி நடைமுறைப்படுத்த முனைவாரானால் அதனை நாம் வெகுவாகக் கண்டிக்கிறோம். ஒருவரின் இத்தகைய போக்கை செவிமடுக்கும்போது சுதந்திர ஊடக அமைப்பு வேதனை அடைகிறது என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

# ரூ.400 கோடி சொத்துக் குவிப்பு வழக்கில் அனுருத்த விடுதலை

## பூர்வாங்க ஆட்சேபனை ஏற்பு

கொழும்பு, டிச.3

நானூறுகோடி ரூபாவுக்கு மேற்பட்ட தொகையைக் குறுக்கு வழிகளில் சம்பாத்தித் தார் எனத் தெரிவித்து முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவுக்கு எதிராக லஞ்ச, ஊழல் தடுப்புத் திணைக்களம் தாக்கல் செய்திருந்த வழக்கில் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜேசுந்தர இந்தத் தீர்ப்பை கடந்த வெள்ளிக்கிழமை வழங்கினார்.

அனுருத்த ரத்வத்தை சார்பில் எழுப்பப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனை ஒன்றை ஏற்றே, இந்த விடயத்தை விசாரிப்பதற்கு இந்நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கம் இல்லை எனக் குறிப்பிட்டு நீதிபதி இத் தீர்ப்பை வழங்கினார்.

தாம் சம்பாதித்த நானூறு கோடி ரூபாவுக்கு மேற்பட்ட தொகைக்கு அனுருத்த ரத் வத்தை சரியான கணக்குக் காட்டவில்லை என்று தெரிவித்து இந்த வழக்கை லஞ்ச, ஊழல் தடுப்புத் திணைக்களம் தாக்கல் செய்திருந்தது.

வழக்கு விசாரணை ஆரம்பித்து சுமார் 25 சாட்சிகளும் சாட்சியமளித்தனர். இச்சமயத்தில் அனுருத்த சார்பில் பூர்வாங்க ஆட்சேபனை ஒன்று எழுப்பப்பட்டது.

மேற்படி சொத்துகள் தமக்குக் கிடைத்தமை தொடர்பாக அனுருத்த ரத்வத்தை தெரிவித்த விளக்கத்தை லஞ்ச, ஊழல் தடுப்பு ஆணைக்குழு முன்னர் நிராகரித் திருக்கின்றது. அது குறித்து அது நீதிமன் றுக்கு அறிவித்திருக்கவில்லை. அத்தகைய பின்னணியில் இந்த வழக்கை இந்த நீதி மன்றம் விசாரிக்க முடியாது என வாதிடப் பட்டது.

இந்த ஆட்சேபனையை ஏற்றே வழக்கை இடைநடுவில் தள்ளுபடி செய்திருக்கின்றது நீதிமன்றம். இத்தீர்ப்பை ஆட்சேபித்து சட்டமா அதி பர் திணைக்களமும் லஞ்ச, ஊழல் தடுப்புப் பிரிவும் மேன்முறையீடு செய்யக்கூடும் எனத் தெரிகின்றது. (சி)

# குஷ்புவுக்கு எதிராக மற்றுமொரு வழக்கு!

ஆலதுதூர், டிசெ.3

இந்துத் தெய்வங்களை அவமதித்தார் என்ற சர்ச்சையில் சிக்கியிருக்கும் நடிகை குஷ்புவுக்கு எதிராக சென்னை நீதிமன்றில் மேலும் ஒரு வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்தத் தெய்வங்களை அவமதித்தார் என குஷ்பு மீது, கும்பகோணம் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், சென்னை நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமையன்று ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

சைதாப்பேட்டை பெருநகர 17ஆவது நீதிமன்றில் நம்மாழ்வார் பேட்டையைச் சேர்ந்த குமார் என்பவர் சார்பில் சட்டத்தரணி ராம் மனோகர் என்பர் இந்த மனுவைத்தாக்கல் செய்துள்ளார்.

'சென்னையில் 'வல்லமை தாராயோ' என்ற சினிமா படப்பூஜையில் நடிகை குஷ்பு கலந்து கொண்டபோது, இரு மதங்களுக்கு இடையே மோதல் ஏற்படுத்தும் வகையில், அம்மன் சிலைக்கு அருகே அமர்ந்திருந்தார். இதற்கு நடிகை குஷ்பு மன்னிப்புக் கேட்பார் என்று எதிர்பார்த்தோம். ஆனால், அவர் மன்னிப்புக் கேட்கவில்லை.

'இது பற்றி பாண்டி பஜார்' பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு கொடுக்கச் சென்றோம். பொலிஸார் முறைப்பாட்டை ஏற்கவில்லை. எனவே, பாண்டிபஜார் பொலிஸில் நடிகை குஷ்பு மீது வழக்குப் பதிவு செய்து விசாரிக்க நீதிமன்றம் உத்தரவிடவேண்டும்' - என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மீதான விசாரணை எதிர்வரும் 5ஆம் திகதி நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்படும். (சி)

# கொட்டாஞ்சேனைப் பொலீஸ் நிலையத்திலிருந்து பூஸா முகாமுக்கு அனுப்பப்பட்டோர் பெயர் விவரங்கள்

கொழும்பு, டிசெ.3

கொழும்பில் தமிழ் இளைஞர், யுவதிகள் கடந்த மூன்று நாள்களாக கைதுசெய்யப்பட்டு பொலீஸ் காவலில் வைக்கப்படுகின்றனர். அவர்களில் பலர் பூஸா தடுப்பு முகாமுக்கு அனுப்பப்படுகின்றனர். கொட்டாஞ்சேனைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு வெள்ளிக்கிழமையன்று பூஸாவுக்கு அனுப்பப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக் கொண்டவர்களின் விவரம் வருமாறு:-

இராசையா தயானந்தன் (சண்டிலிப்பாய் வடக்கு), பாலச்சந்திரன் கிரிஷாந் (உரும்பிராய் வடக்கு), நன்னிதம்பி செல்வராசா (கோப்பாய்), தேவேந்திரன் ரதீஸ் (கரணவாய் தெற்கு), சிங்கரத்தினம் சுபாஸ்குமார் (ஊரெழு கிழக்கு), அலோசியஸ் கெனிசியஸ் (குருநகர்), சின்னப்பு விக்னேஸ்வரன் (கோப்பாய்), சிவலிங்கம் செந்தூரன் (கைதடி), சின்னப்பு ஜெகதீஸ்வரன் (கோப்பாய்), கந்தசாமி நாகேந்திரன் (கெருடாவில்), கந்தசாமி ராஜ்குமார் (மானிப்பாய்), செல்வரத்தினம் ஜெயந்தகுமார் (ஆனைக்கோட்டை), சந்தனம் கார்த்தீபன் (கட்டுடை), சிவராசா ரகுநாதன் (மானிப்பாய் வடக்கு), மவுன்பேபி மொரிஸ் (மருதடி வீதி, யாழ்ப்பாணம்),

மரியதாஸ் யூட்சயூரன் (ராசசிங்கம் றோட், யாழ்ப்பாணம்), அன்ரன் யூட்பிரகாஷ் (யாழ்ப்பாணம், வேலையா ரசிந்தன் (அளவெட்டி), சத்தியசீலன் வாசன் (தாளையம்பதி றோட்), கோபாலகிருஷ்ணன் பாலச்சந்திரன் (நெல்லியடி), சகாயதாசன் அமலதீபன் (நெடுந்தீவு), செல்வம் கிருஷ்ணராஜா (கண்டி வீதி, அரியாலை),

நவரத்தினம் விஜயகுமார் (மிருசுவில்), சண்முகராசா தயாபரன் (உடுவில்), சுந்தரலிங்கம் கோபிராஜ் (சாவகச்சேரி), இராசையா பிரியந்தன் (சங்கானை), கந்தசாமி ராஜ்குமார் (நாகர்கோவில் மேற்கு), குணரட்னம் விஜயன் (சங்குவேலி), இராசதுரை வணிகலா (புத்தூர் கிழக்கு), குமராபதி அஜித் (கோண்டாவில் கிழக்கு), லோகநாதன் பார்த்தீபன் (கொழும்புத்துறை), புவனராசா பழனிசாந்தன் (ஆனைக்கோட்டை), நற்குணம் ஆதவன் (இமையாணன்), மூர்த்தி ஸ்ரீதர் மயில்வாகனம் (இமையாணன் வடக்கு), பாக்கியநாதன் நிரஞ்சன் (குருநகர்), இராசமுத்து ஜோய்மெல்கம் (குருநகர்), ஸ்ரீசாந்தன் ரேமன் (ஊர்காவற்றுறை),

விக்டர்வின்சலோடயஸ்பார்த்தீபன் (நெடுந்தீவு), ஐயாத்துரை சத்தியசீலன் (சங்கரத்தை), கணேசலிங்கம் சிவசங்கர் (சிறுப்பிட்டி மத்தி), நித்தியானந்தன் துஷ்யந்தன் (அரியாலை), ஜெயராஜசிங்கம் கார்த்தீபன் (நாவற்குழி), ஜேசுவான்பிள்ளை அருள்ராஜா (புலோலி), சந்திரசேகரன் ரவிராஜ் (கைதடி கிழக்கு), செல்வராசா விமலேஸ்வரன் (கோப்பாய் மத்தி),

இராஜமுத்து ஜெபநேசன் (குருநகர்), இராசரட்ணம் கிருஷ்ணதீபன் (பண்ணாகம்), இராஜேந்திரன் விஜயராசா (வரணி வடக்கு), தர்மலிங்கம் விஜயநாத் (அளவெட்டி), முருகன் ரவிச்சந்திரன் (புத்தூர் கிழக்கு), நல்லையா கஜேந்திரன் (மானிப்பாய்), புவனராஜா பாலரூபன் (ஆனைக்கோட்டை),

சி.எட்.வட்மதன் (பொலிகண்டி கிழக்கு), தேவராசா அமிலன் (கைதடி மத்தி), மனோகரன் லிவிந்தன் (கைதடி மேற்கு), துரைராசா ரதீபன் (சண்டிலிப்பாய்) தர்மகுலசேகரன் பிரதீப் (சண்டிலிப்பாய்), நாகலிங்கம் சிவஸ்கந்தராசன் (சண்டிலிப்பாய்), தவானந்தராசா அரவிந்தன் (சண்டிலிப்பாய்), தேவரர்சா அனோசன் (கைதடி மத்தி), மாணிக்கம் மோகநந்தன் (மட்டுவில்), நற்குணராசா விஜித்தன் (மல்லாகம்), சந்திரமோகன் நவநீதன் (நெல்லியடி கிழக்கு), தேவராசா கஜேந்திரன் (உரும்பிராய் கிழக்கு), நடராசா பாஸ்கரன் (கோண்டாவில் மேற்கு), இராஜரட்ணம் திரூபன் (ஊரெழு மேற்கு), ரட்ணசிங்கம் சுதர்ஷன் (கோண்டாவில் தெற்கு), கந்தையா கமலரூபன் (வீமன்காமம், தெல்லிப்பழை), ரட்ணம் சிவகுமார் (சிறுப்பிட்டி),

நாகராசா தியாளன் (ஊரெழு மேற்கு), சின்னத்துரை சிவகுமார் (இணுவில் தெற்கு), இராஜேந்திரன் நிஷாந்தன் (கோண்டாவில்), திருஞானசம்பந்தமூர்த்தி பார்த்தீபன் (வல்வெட்டித்துறை), ஜேசுராசா சசிலன் (உடுவில் தெற்கு), ஜெயராசா ஜெயரட்ணம் (சுழிபுரம்), தேவராசா மோகனதாஸ் (சரவணை), பூலோகம் கஜிதரன் (சுழிபுரம்), சின்னப்பு மகேஸ்வரன் (சங்கானை), செல்லத்துரை கபிலன் (உரும்பிராய் மேற்கு), விஜயரட்ணம் பரஞ்சோதி (நாகர்கோவில்), பாலசுந்தரம் சுபாஸ்கரன் (கொடிகாமம்), ராஜன் ராஜ்குமார் (கைதடிச் சந்தி), செல்வரட்ணம் செந்தீபன் (மிருசுவில்), விஜயரட்ணம் சுஜிராஜ் (மானிப்பாய்), செல்வத்துரை சிவகுமாரன் (வரணி வடக்கு), சந்திரசேகரன் தவராஜா (அரியாலை), சதானந்தன் சசிதரன் (கோண்டாவில்),

தம்பிராசா ஜேசுவரன் (கல்மடு), ரத்தினசிங்கம் யோகேஸ்வரன் நெடுங்கேணி), அல்பேட் அன்றுப்பிள்ளை (வவுனியா), நாகராசா விஜயகுமார் (வரணி), செந்தில்நாதன் கோபிநாத் (கோப்பாய்), சத்தியாகப்பு அருள்யோகேஸ்வரன் (நெடியசிட்டி மத்தி), சபாரட்ணம் நிரூபன் (வவுனியா), சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை (வாளைச்சேனை), வோயுதம் சசிதரன் (முருங்கன்), ராசதுரை சிவனேஸ்வரன் (நிலாவெளி), கணேஸ் தவச்செல்வன் (நெடுங்கேணி), கருப்பையா பூமணி (கண்ணாதிட்டி), வடிவேல் மலர் (வாழைச்சேனை).

# இன்றைய அரசியல் முறையில் மக்கள் நம்பிக்கை இழந்து விட்டார்கள்

## கலாநிதி குமார் ரூபசிங்க சொல்கிறார்

கொழும்பு, டிசெ.3

இந்த நாட்டு மக் கள் இங்குள்ள அரசியல் அமைப்பில் நம்பிக்கை இழந்துவிட்டார்கள். இந்த அமைப்பில் எல்லா மட்டத்திலும் ஊழல் மலிந்துபோய் மக்களை நம்பிக்கை இழக்கவைத்துவிட்டது. சமாதான சகவாழ்வு



அமைப்பின் நிறைவேற்று அதிகாரியான கலாநிதி குமார் ரூபசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அமைச்சரவை முறையானது. ஒரு கேலிக்கூத்தாக மாறியுள்ளது. அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களுமாக 107 அமைச்சர்கள் இருக்கிறார்கள் என்று கிண்டல் செய்தார் அவர்.

'த நேஷன்' வார இதழுக்கு குமார் ரூபசிங்க அளித்துள்ள பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

அமைச்சர்களின் செலவுகளை சமாளிக்க செலவிடப்படும் பணம் வீண் விரயம். இந்த நாட்டின் ஊழல்களுக்கு மூலகாரணமாக விருப்பது தேர்தல் முறையாகும். ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக வரவேண்டுமானால் ஒருவருக்கு ஒரு கோடி ரூபா பணம் தேவைப்படுகின்றது. ஒரு சாதாரண மனிதனால் இதைச் சமாளிக்க முடியாது ? என்று அவர் தெரிவித்தார்.

தேசிய போர் எதிர்ப்பு முன்னணியின் தலைவராகவும் விளங்குகின்ற குமார் ரூபசிங்க அந்த அமைப்பின் ஆதரவில் கடந்த மாதம் 10 ஆம் திகதி நடத்தப்பட்ட மக்கள் மாநாடு பற்றி விளக்கம் அளித்போது கூறியதாவது:-

22 மாவட்டங்களிலிருந்தும் ஆயிரக் கணக்கான வாக்குகள் மாநாட்டில் கலந்து கொண்டார்கள். குடிமக்களின் உரிமைகள் பற்றி அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதே முக்கிய நோக்கம். மக்கள் விண்ணப்பம் என்றதோர் ஆவணம் மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்டது. நாட்டிலுள்ள பல அமைப்புகள் இன்றைய நாட்டின் நிலைமைகள் பற்றி ஆராய்ந்துவருகின்றன. இன்றைய பிரச்சினை போர்மட்டுமன்று. அதையும் விட ஆழமானது. எனவே மிகவும் விஸ்தாரமானதொரு கூட்டிணைப்பு ஒன்றை நாம் ஏற்படுத்தவேண்டும்.

### ஜனநாயகத்தை அரசு விற்றுவிட்டது

ஜனநாயகம் - ஏழை மனிதனின் இந்த அதிகாரத்தை இன்றைய அரசாங்கம் விலை பேசி விற்றுவிட்டது. அதனை நாம் அசைவு இன்றிப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். நாட்டில் ஊழல் தலை விரித்து ஆடுகின்றது. பெரும் தொகைப் பணம் கபளீகரம் செய்யப்பட்டுவிட்டமை பற்றி கேள்விப் படுகின்றோம். 'கோப்' அறிக்கை நாட்டில் நிகழ்ந்துள்ள மோசடிகளை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. 'வற்' ஊழல் பில்லியன் கணக்கில் நாட்டின் சொத்து சூறையாடப்பட்டதைக் காட்டுகிறது.

லஞ்ச ஊழல் ஆணைக்குழு போதியதாய் இல்லை. சமூகச் சீரழிவு, கலாசாரச் சீரழிவு தேசிய விழுமியங்களின் சீரழிவு மோசமடைந்து விட்டன. நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆயுதங்கொண்டு திரிகிறார்கள். ஊடகங்களை அச்சுறுத்துகிறார்கள். நாம் நம்பிக்கை வைத்த தலைவர்கள் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்காமல் விட்டது மட்டுமல்ல, அவர்களே பிரச்சினைகளின் பங்காளிகளாகியுள்ளார்கள். இன்றைய ஆட்சிமுறையில் மக்கள் அரசியல் மட்டத்தில் இடம்பெயர்ந்தவர்களாகி விட்டார்கள். எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு அமைதியாகப் பின்பற்ற வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

### போரில் வெற்றி பெற முடியாது

எந்த நாட்டுக்கு எதிராகவே மேற்கொள்ளப்படுகின்ற போரில் வெற்றி பெற்று விட முடியும் என்று இந்த அரசாங்கம் நினைக்கிறது. எந்த ஒரு நாடும் பயங்கரவாதத்துக்கு எதிராகப் போர் செய்து வெற்றிபெற்றதில்லை. உயிர்களும் சொத்துக்களும் அழிவதுதான் மிச்சம்.

நாடு யுத்த கலாசாரத்தில், குற்றம் புரிவோரை பாதுகாக்கும் கலாசாரத்தில் மூழ்கிப் போயுள்ளது. இதனால் அச்சமும் ஆதங்கமும் மக்கள் மத்தியில் பரவியுள்ளன. யுத்தம் காரணமாகக் கல்வி, கலாசாரம், சுகாதாரத் துறைகளுக்கும் பயன்படுத்தப்பட வேண்டிய பணம் போருக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. பணம் கொடுப்பவர்களிடம் அரசு பெறுகின்ற கடன்களை எதிர்கால சந்ததியினர்தான் செலுத்த வேண்டியிருக்கும்

விடுதலைப் புலிகள் அமைப்பு அதன் அமைப்புகளின் விடுதலைக்காகப் போராடுவதாகக் கூறிக்கொண்டு பயங்கர வாத்தில் ஈடுபடுகின்றது. சிறுவர்களைப் போராளிகளாகச் சேர்க்கின்றது. இது அவர்கள் கூறும் விடுதலையை அடைய உதவமாட்டாது. நாடு பிரிக்கப்படுவதை நாம் ஆதரிக்கவில்லை. மனிதத்துவத்தின் மூலமே போரில் வெற்றிகாண முடியும்.

### மனித சுதந்திரத்தை புலிகள் மதிக்கவேண்டும்

விடுதலைப் புலிகள் மனித சுதந்திரத்தை மதிக்க வேண்டும். 25 வருடங்களாக நடத்துகின்ற போரினார் வெற்றி காணமுடியவில்லை. புலிகளை அரசியலின் நீரோட்டத்துக்கு வந்து ஜனநாயக வழிமுறையைத் தேர்ந்தெடுக்கும்படி கோருகின்றோம்.

தமிழ் மக்கள் கடந்த காலத்தைப் போலவே இப்பொழுதும் உரிமைகள் பறிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

முறையான அதிகாரப் பரவல் மூலம் மட்டுமே இந்தப் பிரச்சினை தீர்க்கப்படமுடியும் என்று நம்புகின்றோம் - என்றார். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திக்கரை முருகமூர்த்தி கோயில்
## களபூமி, காரைநகர்
# மகா கும்பாபிஷேகம் -2008

**காலம்: தைத்திங்கள் 13 ஆம் நாள் 27.01.2008**

மேற்படி நிகழ்விற்குப் பூர்வாங்கமாக யந்திரப்பிரதிஷ்டையும் யந்திர பூசையும் கார்த்திகைத் திங்கள் 13 ஆம் நாள் (29.11.2007) வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

"அனைவரும் வருக முருகப் பெருமானின் திருவருளைப் பெறுக"

**முகாமையாளர்.**

(68471)

## யாழ்ப்பாணம் மாநகரசபை
## 2008 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல்

கீழே குறிப்பிட்டுள்ள வழங்கு பொருள்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தக்காரர் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் 31.03.2008 ஆம் திகதி வரையும் எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும்.

### பொருள்கள்

01. காகிதாதிகள், எழுதுபொருள்கள்
02. அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள், இரும்பு அலுமாரி)
03. மேல்நாட்டு மருந்துவகைகள், வைத்திய உபகரணங்கள்
04. சித்த மருத்துவ மருந்துகள்
05. கோலவுடைத்துணிகள், யன்னல் துணிகள், ஏனைய துணிவகைகள்
06. பாதணிகள், மழைக்கவசம் மற்றும் தோல்பொருள்கள்
07. கட்டடப் பொருள்கள் (சிமெந்து, ஓடுகள்) முதலியன
08. தீந்தைகள், நிறந்தீட்டும் பொருள்கள் முதலியன
09. கற்கள், மணல்கள்
10. நீர்வழங்கு பொருள்கள், பி.வி.சி.குழாய்கள் முதலியன
11. வாகன இயந்திர உதிரிப்பாகங்கள், துணை உறுப்புகள்
12. மின்சார இயந்திரபொருள்கள், மின்கருவிகள்
13. விறகு, தேங்காய் மட்டை, கிடுகுகள்
14. எரிபொருள், உராய்வு நீக்கிகள், கிறீஸ்
15. இரும்புப்பொருள்கள்
16. பனைமரங்கள், சலாகைகள்
17. நூலகங்களுக்குரிய நூல்கள்
18. வாகனங்களுக்கான பற்றரிகள், ரயர்கள், ரியூப் முதலியன
19. தீராந்திகள், நீப்பைகள், பலகைகள்
20. தும்புத்தடி, விளக்குமாறு, நார்க்கடகம், கால்துடைப்பம், இழைக்கயிறு, தேடாக்கயிறு முதலியன
21. சுத்திகரிப்புப் பிரிவுகளுக்கான கிருமிநாசினிகளும், மருந்துகளும்
22. கணனி, கணனிகளுக்கான உதிர்ப்பாகங்கள், போட்டோ பிரதி இயந்திரம், போட்டோ பிரதி இயந்திரங்களிற்கான உதிரிப்பாகங்கள் (கனொன், சார்ப் வகைகள்) வழங்கல்

### சேவைகள்

01. அச்சிடுதல்
02. தட்டச்சு இயந்திரம் திருத்தல்
03. மோட்டார் வாகனம் திருத்தம்
04. ரியூப் ஒட்டுதல்
05. ஒட்டு வேலைகள், உலோக வேலைகள்
06. ஏற்றியிறக்கும் வேலைகளிற்கு பாரம் குறைந்த வாகனங்களை வாடகைக்கு விடல்
07. சுத்திகரிப்பு, ஏற்றியிறக்கல் வேலைக்கு ரக்ரர் வாடகைக்கு விடல்
08. கோலவுடை தைத்தல்
09. மின் மோட்டார்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள், குளிர்சாதப் பெட்டிகள் திருத்தம்
10. மின் கலங்களிற்கு மீள மின்வலுவூட்டல்
11. றப்பர் முத்திரை தயாரித்தல், புளக் தயாரித்தல்
12. வாகனங்கள் சேர்விஸ் செய்தல்
13. கணனி இயந்திரம், போட்டோப்பிரதி, சேர்விஸ் செய்தல்

கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "வழங்கல்கள், சேவைகள் 2008" எனக்குறிப்பிட்டு பதிவு தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**"வழங்கல்களுக்கும், சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்"** என முகவரியிடப்பட வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல், சேவைகளுக்கும் தனித்தனியாக விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். இப்படிவங்களை யாழ்.மாநகரசபை கொள்வனவுப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் பதிவுக் கட்டணமாக (ரூபா 500 உடன் மேலதிகமாக வற்வரி ரூபா 75 ரூபா உட்பட ரூபா 575 பெறுமதியான காசுக்கட்டளை அல்லது தபால் கட்டளை "ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்" என்ற பெயரிற்கு பெறப்பட்டு இணைத்து அனுப்பி வைக்கவேண்டும். பணமாக செலுத்த விரும்புபவர்கள் சபையின் நானாவித இறைவரிக் கிளையில் நேரடியாக வேலை நாள்களில் செலுத்த முடியும்.

கூறு விலைகள் பதிவு செய்பவர்களிடமிருந்து கோரப்படும். கோரப்படும் போது கூறுவிலைகளை சமர்ப்பிக்கத்தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருள்கள்/ சேவைகள் வழங்கத்தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருள்கள்/ சேவைகள் வழங்கும் எந்த ஒரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றி பதிவுப் புத்தகத்தில் இருந்து நீக்கப்படும்.

(மு.செ.சரவணபவ)
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(சி/54576)

## கந்தரநுபூதி நூல்இலவசமாகப் பெறலாம்

சுழிபுரம்,டிசெ.3

கந்தரநுபூதிப் பாடல் ஆய்வுரை நூலை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் கந்தரநுபூதி ஐம்பத்தொரு பாடல்கள், அருணகிரிசுவாமிகள்இயற்றிய நூலும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றை தபாலில்பெற்றுக்கொள்ள விருபுவோர் தபால் முத்திரையுடன் கூடிய கடித உறையை செயலாளர், பஜனைச்சபை, சுழிபுரம் என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

சபையார் சமய நூல்களாகிய பாடல்களை அச்சிட்டு மனனப் போட்டிகளை நடத்தி பரிசும் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

(203-28)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




கெஜரட்ணசிங்கம் -வினித்தா தம்பதியரின் செல்வப் புதல்வி **அனீக்கா** இன்றைய தனது முதலாவது பிறந்ததினத்தை லண்டனில் உள்ள HARROW TEACHERS CENTRE மண்டபத்தில் 08.12.2007 அன்று வெகுவிமரிசியாகக் கொண்டாடுகின்றார்.இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பூட்டம்மா, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் விழுபனை கண்ணகை அம்மன், பெரிய கேணிப்பிள்ளையார் அருளால் பல கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

*எழுதுமட்டுவாழ் தெற்கு,எழுதுமட்டுவாழ்.* (68315) தகவல்: **அம்மப்பா, அம்மம்மா.**

### விற்பனைக்கு

இரண்டு மாத சினையுடன் கூடிய ஜமுனா பாறி ஆடு விற்பனைக்குண்டு.
**செல்வரட்ணம்,**
96, அம்பலவாணர் வீதி, அந்தியடி 0776487264. (68505)

### விற்பனைக்கு

பூச்சி நீக்கப்பட்ட பொமநேரியன் நாய்க் குட்டிகள் ஆண், பெண் விற்பனைக்குண்டு.
**கனகராசா,**
புதிய வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை. (68510)

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

கறுப்புநிற பொமநேரியன் நாய்க்குட்டிகள் பூச்சி நீக்கியது விற்பனைக்குண்டு.
51, விதானையார் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (68503)

### சண்ரெல் தொலைபேசி

யாராவது சண்ரெல் தொலைபேசி விற்க விரும்பினால் எம்முடன் தொடர்பு கொள்ளவும். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
*தொடர்பு:* 0779080505, 0773121170.
*உடுவில், சுன்னாகம்.* (68456)

### மணமகன்தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச தொழில் புரியும் 48 வயது, இளமைத் தோற்றமுடைய, தாரமிழந்த, பிள்ளைகளற்ற மணமகளுக்கு 48-51 வயதுக்கிடைப்பட்ட (அரச, தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர் விரும்பத்தக்கது). மணமகனை சகோதரன் எதிர்பார்க்கிறார். வியாபாரத்தில் உள்ளவர்களும், தாரமிழந்த, விவாகரத்துப் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
விளம்பர இல. 3030. மே/பா. உதயன்.

### விற்பனைக்கு

புதிய Sony வீடியோ டெக், புதிய குசன் கதிரை செற், வோசிங் மிஷன் என்பன விற்பனைக்குண்டு
A.G. செல்வம், 107, டேவிற் வீதி, யாழ்ப்பாணம். T.P.:0779769852. (68499)

### வீடு விற்பனைக்கு

கல்வியங்காடு, கலைமகள் வீதியில் 2 பரப்புக் காணியில் அமைந்துள்ள 4 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு உள்ளது.
*தொடர்பு:* த.சத்தியமூர்த்தி,
விநாயகர் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021- 222 3193, 077- 9330034.

### விமானப் பயண சீட்டு

**யாழ்.-கொழும்பு**
ஒரு வழி- 8750/-
379- NAVALAR ROAD,
JAFFNA

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்)
## மீள் கேள்வி அறிவித்தல்

*மேற்படி விடயம் தொடர்பான 08.11.2007 ஆம் திகதிய உதயன் பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம் கும்பலை மல்லாகம் மாட்டிறைச்சிக்கடைகள் தவிர்ந்த ஏனையவற்றுக்கு மீள்கேள்வி கோரப்படுகின்றது.*

| | |
|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித் திகதி: | 11.12.2007 |
| கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதி: | 14.12.2007 நண்பகல் 12மணி |
| கேள்விகள் திறக்கும் திகதி: | 14.12.2007 பி.ப.2.00 மணி |

*ஏனைய மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்திலும், மல்லாகம்/ தெல்லிப்பழை உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

**இ.அருணகிரி,**
*செயலாளர்,*
வலி.வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை, மல்லாகம்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை,
மல்லாகம்.
30.11.2007 (சி/54571)

### அழைப்புக் கட்டளை

இல.16 பிரிவு 55 (1)
யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில்

இராசு யோகராசா,
இல.77, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
வழக்காளி

வழ.இல: மணநீக்கம்/ 787 எதிராக
திருமதி யோகராசா இந்திராணி,
விவாகத்தின் முன் இந்திராணி
கதிரவேல்,
ஆவரங்கால் கிராம அபிவிருத்திச் சபை
ஒழுங்கை. புத்தூர்.
-எதிராளி

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளி/
மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி

தமக்கும் உமக்குமிடையேயுள்ள திருமணத்தை ரத்துச் செய்வதற்காக இந் நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின், 2007 ஆம் ஆண்டு 12 ஆம் மாதம் 07 ஆம் திகதியன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவீர் தேவைப்படுத்தப் படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவீர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவீர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் தோன்றாவிடில், சட்ட முறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவீர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கடளைப்படி
து.சிறீமோகன்
பதிவாளர், மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

வரைவு
சி.கனகசிங்கம்,
வழக்காளியின் சட்டத்தரணி.

*குறிப்பு:-* விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் திகதி பற்றிய அறிவித்தலை நீவீர் பெற விரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந் நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரையினைக் கொடுக்குமாறும், 80 ஆம் பிரிவின் மூலம் நீவீர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

து.சிறீமோகன்,
கையொப்பம், பதிவாளர்.

2007 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் (27) ஆந்நாளாகிய இன்று. (68473)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தமிழ் பேசும் எம்.பிக்களே! உங்களின் பிரதிபலிப்பு என்ன?

கண்ணில்படும் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் எல்லோரையும் விடுதலைப் புலிகள் இயக்கச் சந்தேகநபர்களாக நோக்கும் தென்னிலங்கைப் பாதுகாப்புத்துறை உயர்மட்டத்தின் 'அதிமேதாவித்தனத்தினால்' தெற்கில் - குறிப்பாக மேற்கு மாகாணத்தில் - தமிழர்களின் வாழ்வு பெரும் அச்சத்துக்குள்ளும் அவலத்துக்குள்ளும் மூழ்கிக் கிடக்கின்றது.

ஹிட்லர் யூதர்களை நாசிவதை முகாம்களுக்கு அள்ளிச் சென்ற மாதிரி தென்னிலங்கையில் தமிழருக்கு - குறிப்பாகத் தமிழ் இளம் சமுதாயத்துக்கு - எதிரான இனச் சுத்திகரிப்பு மேலிடத்து ஆசியோடும், வழிகாட்டலோடும் மும்முரமாக முன்னெடுக்கப்படுகின்றது.

தலைநகர் கொழும்பிலும் அதை அண்டிய பிரதேசங்களிலும் தமிழர்கள் செறிந்து வாழும் இடங்களில் சல்லடை போட்டுத் தேடுதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. வீதிகளில் வாகனங்கள் வழிமறிக்கப்பட்டு, பயணிகள் இறக்கப்பட்டு, துருவப்படுகின்றார்கள். தமிழர்கள் தடுத்து வைக்கப்படுகின்றார்கள். உரிய ஆவணங்கள், அடையாளப்படுத்தல் பதிவுகள், சான்றுகள் இருந்தாலும் கூட வழி மறிக்கும் படையினருக்கு அல்லது பொலிஸாருக்கு வழி மறிக்கப்பட்ட தமிழரின் தோற்றம் குறித்து மனதில் ஏதும் சந்தேகம் தோன்றுமானால் அந்தத் தமிழர் தடுக்கப்படுகின்றார்; கைதுசெய்யப்படுகின்றார். ஏற்கனவே தயாராக இருக்கும் தடுப்புக் காவல் உத்தரவுப் பத்திரத்தில் அவரது பெயர் பொறிக்கப்படுவதோடு அவர் தடுப்புக் காவல் கைதியாகின்றார்.

இவ்வாறு கண்களில் கண்ட தமிழர்கள் எல்லோரையும் அள்ளுவதன் மூலம் புலிகளை மடக்கிப் பிடிக்கலாம் என்ற தென்னிலங்கை அறிவாளிகளின் 'அதிபுத்திசாலித்தன' சிந்தனை செயலுருவில் அரங்கேறிக்கொண்டிருக்கின்றது.

தடுப்புக் காவல் கைதிகளாக மாறிக்கொண்டிருக்கும் தமிழர்களின் எண்ணிக்கை கடந்த ஓரிரு நாட்களில் பல ஆயிரங்களைத் தாண்டிக் கொண்டிருக்கின்றது.

வேறு ஏதேனும் குற்றமும் செய்யாமல் தமிழனாகப் பிறந்த குற்றத்துக்காக கைது செய்யப்படுதல், தடுத்து வைக்கப்படுதல் என்ற அவமானத்துக்கும் அச்சுறுத்தலுக்கும் தமிழ்ச் சமூகம் முகம் கொடுத்துக் கொண்டிருக்க, அந்தத் தமிழ் மக்களின் வாக்குகளில் ஏறி, எம்.பிக்களான சிலர் அமைச்சு பதவிகளைச் சுகித்துக்கொண்டு உல்லாசம் கழிக்கின்றார்கள்.

விடுதலைப் புலிகளோடு அரசு யுத்தம் புரிவதும், 'பயங்கரவாத எதிர்ப்பு' நடவடிக்கைகளை மேற்கொள்வதும் வேறு. அதற்காகக் கண்ணில் கண்ட எல்லாத் தமிழர்களையும் பயங்கரவாதச் சந்தேக நபர்களாக அடையாளம் கண்டு தீர்மானிப்பது வேறு.

புலிகள் இயக்கத்தோடு அல்லது அதன் செயற்பாடுகளுடன் நேரடியாகத் தொடர்புபட்டவர்கள், அதன் மூலம் தனது நாட்டின் சட்டங்களை மீறியவர்கள் என்று கருதுவோரை தென்னிலங்கை அரசு கைது செய்வதும், தடுத்து வைப்பதும், விசாரணை செய்வதும் பெயருக்கேனும் நியாயப்படுத்தக் கூடியவைதான்.

இவை எதுவுமில்லாமல், தமிழன் என்பதற்காக ஒவ்வொருவரையும் சந்தேக நபராகவும், பயங்கரவாதியாகவும் நோக்குவதும் தீர்மானிப்பதுவும் மிகமோசமான நடவடிக்கையாகும். ஒன்றுமறியாத அப்பாவிகளுக்கு புலிச் சந்தேக நபர்கள் என்ற நாமத்தைச் சூட்டித் தடுத்து வைப்பது தென்னிலங்கைப் பாதுகாப்புப் பிரிவினரின் கையாலாகாத்தனமன்றி வேறில்லை.

தமிழ் அரசியல்வாதிகள் ஒவ்வொருவரும் - தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் - தமது அரசியல், கொள்கை, கருத்து வேறுபாடுகளைத் துறந்து ஒரே குரலில் ஒருமையாக எதிர்த்துக் குரல் எழுப்பவேண்டிய அராஜகம் ஒன்று தமிழர்களுக்கு எதிராக பெரும் அட்டூழியமாக அரங்கேறிக் கொண்டிருக்கின்றது.

தமது குறுகிய அரசியல் லாபங்கள், பதவி நலன்களைத் துச்சமாக மதித்து; தூக்கி எறிந்துவிட்டு - இனத்துக்காக ? தமிழ்பேசும் மக்களுக்கு அந்த இனத்தில் பிறந்த குற்றத்துக்காக - இழைக்கப்படும் இந்த அநாகரிகக் கொடூரத்துக்காக - பொங்கியெழ வேண்டிய வேளை இது.

தென்னிலங்கை அரசு தமிழ் பேசும் இனத்துக்கு எதிராக அவசரகாலச் சட்டத்தை அராஜகமாகப் பயன்படுத்தி அடாவடித்தனமாக - நியாயப்படுத்த முடியாத - நீதியற்ற - கைதுகளை பெரும் எடுப்பில் கட்டவிழ்த்துவிட்டிருக்கின்றது. புலிச்சந்தேகத்தின் பேரில் அகப்படும் தமிழர்களை எல்லாம் கைது செய்யும் இந்த மிலேச்சத்தனத்துக்கு கருவியாக அமைந்திருப்பது அவசரகாலச் சட்டமே என்பது வெள்ளிடைமலை.

ஆகவே, இந்தக் கொடூரத்துக்காக அரசுடன் பேசுகின்றோம், கொஞ்சிக் குலாவுகின்றோம், உயர்மட்டத்தில் ஆலோசனை நடத்துகின்றோம். ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதுகின்றோம், கடுமையாகக் கண்டிக்கின்றோம் என்று பத்திரிகைகளுக்குக் கதை அளந்து, அறிக்கை வெளியிட்டுக் கொண்டிருப்பதை விடுத்து, ஒருமித்த ஒரே குரலில், சர்வதேசத்தின் செவிப்பறையிலும் ஓங்கி அறையக் கூடிய விதத்தில், ஏதேனும் காத்திரமான நடவடிக்கையைத் தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எடுக்கவேண்டும்.

வரவு - செலவுத் திட்டத்துக்கு போதிய ஆதரவை நாடாளுமன்றத்தில் பெற்றுக்கொள்ள முடியாமல் அல்லாடும் மஹிந்தரின் அரசு, பேரினவாத சர்ச்சையையும், பௌத்த - சிங்கள தேசிய வாத உணர்ச்சியையும் தூண்டிவிட்டுத் தனக்குரிய ஆரவைத் திரட்ட முயல்கிறது. அதற்காக அது அரங்கேற்றும் திருக் கூத்தே இப்போது கட்டவிழ்கின்றது.

தெற்கில் குண்டு வெடித்தால் மட்டுமே தனக்குக் கேட்கும் என்று தனது காதை பக்கச் சார்பாக மூடி வைத்துக் கொண்டிருக்கும் சர்வதேசத்துக்கு, இப்பிரச்சினையை உறைப்பாக உணர்த்தக் கூடிய வகையில் தமிழ் எம்.பிக்களின் பதில் நடவடிக்கை தீவிரமாகவும், காத்திரமாகவும், ஆழமாகவும் இருக்க வேண்டும். செய்வார்களா அவர்கள்?

# மலையகம் பெரும் கொந்தளிப்பில்! சந்திரசேகரனின் கட்சி நெருக்கடியில்!!

## அரசில் நீடிப்பது சிக்கல் என ஜனாதிபதிக்கு அவர் கடிதம்



கொழும்பு,டிச.03

தமிழ்ப்பேசும் மக்களைக் கண்மூடித்தனமாகக் கைது செய்து சிறையில் அடைக்கும் மஹிந்த அரசின் போக்கால் மலையகத் தமிழர்கள் மத்தியிலும் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டிருப்பதாக ஒப்புக்கொண்டிருக்கும் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

அவரது அமைச்சு இது தொடர்பாக வெளியிட்ட செய்திக் குறிப்பின் இது குறித்து பிரஸ்தாபிக்கபக் பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தின் தமிழாக்கம் வருமாறு:-

*மலையகத்தில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது*

கொழும்பில் இன்று (ஞாயிற்றுக் கிழமை) நடைபெற்றுவரும் கடுமையான வீதிச் சோதனைகளினாலும் கண்மூடித்தனமான கைதுகளினா லும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பாதிப்பிற்குள்ளானார்கள்.

தமது தொழிலின் நிமித்தம் கொழும்பு நகரில் தஞ்சம் அடைந்துள்ள நூற்றுக் கணக்கான மலையக இளைஞர், யுவதிகள் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த நடவடிக்கைகளினால் அப்பாவி தோட்டத் தொழிலாளர்களின் குடும்பங்கள் நேரடியாகப் பாதிப்பிற்குள்ளாகியிருப்பதோடு இந்த நிகழ்வு மலையகமெங்கும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

மலையக மக்கள் முன்னணி, இந்த அரசின் ஓர் அங்கமாக இருந்துக்கொண்டு இதனை எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாத நெருக்கடிக்குள்ளாகியிருக்கின்றது.

தற்போதைய சம்பவங்களை ஒட்டி மலையக மக்கள் முன்னணியின் அரசியல் நிலைப்பாட்டையும் மீள் பரிசீலனை செய்யவேண்டுமென கட்சியின் சகல மட்டத்திலிருந்தும் எமக்கு நெருக்கடி ஏற்பட்டு வருகின்றது.


*அரசுக்கு எதிரான நடவடிக்கையில் இறங்கலாம்*

எனவே உடனடியாக அப்பாவி பொது மக்களை விடுதலை செய்யாவிட்டால் மலையக மக்கள் இந்த அரசுக்கு தமது எதிர்ப்பை காட்டுவதற்காக எந்த நடவடிக்கையிலும் இறங்கலாம் என்ற சூழல் ஏற்பட்டுவருவதை அதிர்ச்சியோடு நாம் கவனத்தில் எடுத்துக் கொள்கின்றோம்.

மலையகம் எங்கும் ஏற்பட்டுவரும் கொந்தளிப்பைத் தவிர்ப்பதற்காக தாங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றோம்.

மலையக மக்கள் பாதிப்பிற்கு உள்ளாகின்றமையை பற்றி அரசு தரப்பில் ஏதாவது ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் நாம் அரசுக்குள் ஓர் அங்கமாக இருப்பது பற்றி தீவிரமாக தீர்மானம் எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்படும் என்பதையும் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கின்றோம். - என்றும் குறிப்பிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (அ-உ)

# அரசிடமும், ஜனாதிபதியிடமும் முறையிட்டும் பயன் ஏதுமில்லை



கொழும்பு, டிச. 03

தமிழர்கள் வகை தொகையின்றிக் கைது செய்து அடைக்கப்படுவது குறித்து ஜனாதிபதியிடமும் அரசிடமும் முறையிட்டும் பயன் ஏது மில்லை என்று விசனம் தெரிவிக்கின்றது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

அண்மைக்காலங்களில் கொழும்பிலும் ஏனைய மாவட்டங்களிலும் வாழ்ந்துவரும் - தங்கியிருக்கும் - தமிழ் மக்கள் தொடர்ச்சியாகக் கைதுசெய்யப்பட்டுவருகின்றனர்.

தங்களுடைய அடையாள அட்டை, சான்றுகள் முதலான ஆவணங்கள் காண்பித்தும்கூட அவற்றைப் பொருட்படுத்தாமல் தமிழர் என்ற காரணத்திற்காகவே வகை, தொகையின்றி முதியோர், பெண்கள், மாணவர் யாவரையும் காவல்துறையினரும், ஆயுதப்படையினரும் கைது செய்கின்றனர்.

இவ்வாறு கைது செய்யப்படு வோர் ஏன்கைது செய்யப்படுகிறார்கள்என்பதோ, எங்கு கொண்டு செல்லப்படுகிறார்கள் என்பதோ தெரிவிக்கப்படுவதில்லை.

இதனால் இவர்களின் பெற்றோரும் உறவினரும் கண்ணீர் விட்டுக் கதறி அழுகின்றனர். கைதுசெய்யப்படுபவர்களைத் தேடி அலைகின்றனர். அவலமும் பதற்றமும் அதிகரித்துள்ளன.

இந்நாட்டின் ஜனாதிபதியிடமும் அரசிடமும் இவ்விடயம் குறித்துமுறையிட்டும் பயனில்லை என்பதே நிலை.

இருப்பினும், தொடர்ந்தும் கண்மூடிக் கொண்டிருக்காமல் கைது செய்யப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களை உடன் விடுதலை செய்விக்குமாறு ஜனாதிபதியிடமும், சர்வதேச சமூகத்திடமும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

நாளை (திங்களன்று) நாடாளுமன்றத்திலும் இவ்விடயம் குறித்துக் குரலெழுப்புவோம். ஏனைய தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் கலந்து பேசி அடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையிட்டுத் தீர்மானிப்போம்.

இத்தகைய இனவாத அடிப்படையிலான கைது நடவடிக்கைகள் மனித உரிமை மீறலின் உச்சக்கட்டமாக இலங்கையில் தொடர்கின்றன.

குறிப்பாகச் சர்வதேசம் நேரடியாகத் தலையிட்டு மனிதஉரிமைகளையேனும் நிலைநாட்டவேண்டுமெனக் கோருகின்றோம். - என்று உள்ளது.

# யாழ் நகரில் இரு வர்த்தக நிலையங்கள் நேற்று அதிகாலை தீயில் எரிந்து நாசம்

யாழ்ப்பாணம், டிசெ.03

யாழ். நகரப் பகுதியில் கஸ்தூரியார் வீதியில் அமைந்திருந்த கடைத் தொகுதியில் அமைந்திருந்த நகைக் கடை ஒன்றும், மின்சார உபகரணங்கள் விற்பனை நிலையம் ஒன்றுமாக இரண்டு வர்த்தக நிலையங்கள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

நிசானந்தா நகைக்கடை மணியம் இன்பெக்ஸ் ஆகிய கடைகளே தீயினால் முற்றாக எரிந்து சாம்பராகின. இதனால் இரு வர்த்தக நிலையங்களிலும் சுமார் ஒன்றரைக் கோடி ரூபா வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை 2 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டதெனவும் தீயை அணைக்க யாழ். மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவு வாகனங்கள் வராத நிலையில் மாநகர சபையின் தண்ணீர் பவுசர் ஒன்றின் உதவியுடன் அயலில் உள்ள வர்த்தக நிலையங்களைச் சேர்ந்தவர்களும் படையினரும் தீயை அணைத்தனர் என்று அறிய வந்தது.

கடைகளின் தளபாடங்கள் உட்பட விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த அநேக பொருள்கள் முற்றாக எரிந்து கருகியுள்ளன.

நண்பகல் 11.30 மணிவரை கடை ஊழியர்களும் ஏனையவர்களும் வாளிகளில் தண்ணீர் எடுத்து வந்து தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

கடையின் பின்புறக் கதவு உடைக்கப்பட்டிருப்பதாகவும் மின் ஒழுக்கினால் தீ விபத்து ஏற்பட்டிருந்ததா அல்லது களவுகள் இடம் பெற்ற பின்னர் தீ வைக்கப்பட்டிருந்ததா என்பது குறித்து கடை உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்களிடம் சந்தேகம் தோன்றியுள்ளதாக பேசப்பட்டது

(அ-111)



நேற்று இடம்பெற்ற தீ விபத்தில் சேதமடைந்த கடைத் தொகுதியை படத்தில் காணலாம்

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை - 18 | செவ்வாய்க்கிழமை 04.12.2007 |
| திதி : தசமி | பி.ப. 01.54 |
| நட்சத்திரம் : | அத்தம் முன்னிரவு 01.06 |
| சுபநேரம் | : 10.45 - 12.15 |
| ராகுகாலம் | : 03.15 - 04.45 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகனைக் கடத்திச் சென்றவர்கள் தகப்பனைக் காலில் வெட்டினர்

யாழ்ப்பாணம், டிசெ.03

சண்டிலிப்பாய் வீரபத்திரர் கோயிலடிப் பகுதியில் உள்ள வீடொன் றில் புகுந்த இனந்தெரியாத ஆயுததாரிகள், தந்தையைக் காலில் வெட்டி காயப்படுத்திவிட்டு மகனைக் கடத்திச் சென்ற சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது காலில் காயமடைந்த தந்தை (டி.ஈஸ்வரன் வயது 57) யாழ் போதனா வைத்திய சாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

நேற்றுக் காலை 6 மணியளவில் வெள்ளைவான் ஒன்றில் சென்ற இனந் தெரியாத ஆயுததாரிகள் காயமுற்றவரின் வீட்டினுள் புகுந்து குறிப்பிட்ட வீட்டில்இருந்த இளைஞனைப் பிடித்துச் சென்றதாகவும் அதனை அவரது தந்தை தடுக்கமுற்பட்டபோது அவரைக் காலில் வெட்டி காயப்படுத்திவிட்டு மகனைக் கடத்திச் சென்றதாகவும் கூறப்பட்டது. (அ-203-78)

# கொற்றாவத்தையில் குண்டுவெடிப்பு இளைஞனின் சடலம் ஆஸ்பத்திரியில்

உடுப்பிட்டி, டிசெ.03

வல்வெட்டித்துறை, சமரபாகு பகுதியில் கொற்றாவத்தையில் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் குண்டுவெடிப்பு சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இக் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் 27 வயதுடைய இளைஞர் ஒருவர் மரணமானார்.

சம்பவ இடத்தில் பருத்திதுறை நீதிவான் விசாரணை நடத்தினார். அடையாளம் காணப்படாத நிலையில் சடலம் வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரியில் நேற்றிரவு பொலீசாரால் ஒப்படைக்கப் பட்டது.

சடலத்தை அடயாளம் காண்பதற்கு உதவுமாறு ஆஸ்பத்திரி நிர்வாகம் கேட்டுள்ளது. (அ-1-155)

## வடமராட்சியில் சனி, ஞாயிறு சுற்றிவளைப்புத் தேடுதல்

பருத்தித்துறை, டிசெ.03

வடமராட்சியில் கடந்த இரு தினங்களாக சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளில் படையினர் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை 5 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை தம்பசிட்டி, இன்பருட்டி, ஓடக்கரை ஆகிய பகுதிகளும்-

நேற்றும் அதிகாலை 4 மணிமுதல் பிற்பகல் 3 மணி வரை வல்வெட்டி, பொலிகண்டி ஆகியபகுதிகளும் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

இளம் வயதினரானஆண்களும் பெண்களும் பொது இடத்துக்கு அழைத் துச் செல்லப்பட்டு விசாரணை செய்யப் பட்டனர். (அ-1-226)

## மக்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

இப்போது நாட்டிலுள்ள நிலைமை வழமையான ஒரு நிலைமை அல்ல. அரச படைகள் மேற்கொள்ளும் எந்த ஒரு நடவடிக்கையும் தனிநபருக்கோ அல்லது ஒரு குழுவினருக்கோ எதிரான நடவடிக்கை அல்ல.

ஆனால், மறுபுறத்தில் இது போன்ற நடவடிக்கைகள், குண்டுவெடிப்புகள் போன்ற சம்பவங்கள் இடம்பெறும்போது பொதுமக்கள் உட்பட அனைவருமே பாதுகாப்புத் துறையினர் மீதே குற்றஞ் சாட்டுகின்றனர். இதன் காரணத்தினால் தான் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன - என்றார் அவர். (க-9)

## கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியவற்றின் பிரதிநிதிகளின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

கொழும்புக்கான இந்தியத் தூதுவர் அலோக பிரசாத் இந்தியா செனறிருப்பதால் மனோ கணேசன் எம்.பி. கொழும்புக்கான பிரதி இந்தியத் தூதுவர் மாணிக்கத்துடன் இவ்விடயம் குறித்து உரையாடினார் எனத் தெரிகின்றது.

அப்போதே, இவ்விவகாரம் குறித்து நேரத்துடனேயே புதுடில்லிக்குத் தெரியப்படுத்தப்பட்டு விட்டது என்ற தகவலை மாணிக்கம், மனோகணேசனிடம் தெரியப்படுத்தினார் என அறியவருகின்றது. (உ)

## வாகனங்கள் வழிமறிக்கப்பட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு, கிழக்குப் பிரதேச அடையாள அட்டைகளை வைத்திருப்போர் - வழி மறிக்கப்பட்டனர்.

தெஹிவளை, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி,கிருலப்பனை, கொட்டாஞ்சேனை, கொள்ளுப்பிட்டி, மருதானை, மோதரை, வத்தளை, கந்தானை உட்பட சுமார் இருபது முப்பது இடங்களில் இவ்வாறு நடத்தப்பட்ட சோதனைகளின் போது ஆங்காங்கே வழி மறிக்கப்பட்ட தமிழர்கள் - பல நூற்றுக்கணக்கில் - அந்த இடங்களில் இருந்து பல விசாரணை கூட்டிச் செல்லப்பட்டனர்.

பொது இடங்கள் விசாரணை மையங்களாகின

சில பிரதேசங்களில் வழிமறிக்கப்பட்டு கைது செய்யப்பட்டோர் அவ்வப்பகுதி பொலிஸ் நிலையங்களுக்குச் கூட்டிச் செல்லப்பட்டனர். சில இடங்களில் கைதானோர் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்த தால் அவர்கள் அனைவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து. விசாரிப்பது இயலாது என்ற காரணத் தால் பாடசாலைகள் போன்ற பொது இடங்களுக்கு அவர்கள் கூட்டிச் செல்லப்பட்டனர். அந்த இடங்கள் விசாரணை மையங்களாக்கப்பட்டன.

இவ்வாறு பல நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையங்களுக்கும் விசாரணை மையங்களுக்கும் கூட்டிச் செல்லப்பட்டமையைக் கேள்விப்பட்டு, அவர்களின் உற்றார், உறவினர்கள் பதறியடித்துக் கொண்டு அந்த இடங்களுக்கு முண்டியடித்தபடி திரண்டு வந்தமையால் அந்த இடங்களிலும் சனக்கூட்டம் நிரம்பி வழிந்தது.

ஒரு புறம், பாதைகளின் வாகனங்கள் வழிமறிக்கப்பட்டமையால் ஏற்பட்ட குழப்பம், மறுபுறம் வகைதொகையின்றி பல நூற்றுக்கணக்கில் ஆங்காங்கே தமிழர்கள் அள்ளப்பட்டதனால் ஏற்பட்ட பீதி, போக்குவரத்து மற்றும் இந்தக் கெடுபிடிகளால் பெரும்பான்மையினத்தவர் உட்பட அனைவருக்கும் ஏற்பட்ட சினம் என்று நேற்று ஞாயிறு விடுமுறை தினமான போதிலும் - தலைநகரில் குழப்பமும், பதற்றமும், களேபரமும் நீடித்தன.

### பலர் பின்னர் விடுவிப்பு

ஆயிரத்துக்கும் அதிகமானோர் இவ்வாறு கைது செய்யப்பட்டு விசாரணை மையங்களுக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர். எனினும் அவர்களில் கணிசமானோர் நேற்றே விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

ஆனாலும் பல நூற்றுக்கணக்கானோர் - ஐந்நூறுக்கும் அதிகமானோர் - நேற்று மட்டும் தொடர்ந்து தடுத்து வைப்பதற்கான தடுப்புக் காவலுக்கு மாற்றப்படவிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு காரணம் ஏதுமின்றித் தமிழர்கள் என்பதை மட்டும் அடிப்படையாக வைத்துத் தமிழர்கள் கொத்துக் கொத்தாகக் கைதுசெய்யப்பட்டுக் கூட்டிச் செல்லப்பட்டமை, கொழும்புத் தமிழர்கள் மத்தியில் பெரும் அவமானச் சீற்றத்தையும், ஆழமான மன உளைச்சலையும், அரசுடன் உறவாடிக் கொண்டிருக்கும் தமிழ்த் தலைமைகள் மீது வெஞ்சினத்தையும் வெறுப்புணர்வையும் ஏற்படுத்தியமையை நேரடியாக உணரக்கூடியதாக இருந்தது. (அ-உ)

## அடிப்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்ட பெற்றோரும், உறவினர்களுமாக சுமார் நூற்றியைம்பது பேர் பூஸாவில் தமது உறவுகளின்அவலநிலையை நேரில் கண்டு கண்ணீர் விட்டுக் கதறி அழுதனர்.

நேற்றுமுன்தினம் பூஸாவுக்கு கூட்டிவரப்பட்ட 59 பெண்கள், 360 ஆண்கள் என சுமார் 419 தமிழர்கள் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் -

150 பேருக்கு ஒரு மலசலகூடமே அங்கு உபயோகிக்கப்படுகின்றது என்றும் -

மாற்றுடைகளின்றி முகம் கழுவக்கூட தண்ணீர் வசதி இல்லாது அவர்கள் அவலற்படுகின்றார்கள் என்றும் -

உணவு வசதி போதுமானதாக இல்லாது அரை அவியலுடன் சோறும் பருப்பும் மாத்திரமே நேற்று அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது என்றும் -

கைதானவர்கள் உருக்கமாகத் தெரிவித்தனர்.

அடிப்படை வசதிகள் அற்று அந்தரிக்கும் இந்த நிலைமை எவ்வளவு நாள்கள் தொடரும் என்ற வினா அவர்கள் முகங் களில் பிரதிபலித் தமையையும் அங்குஅவதானிக்க முடிந்தது என்றும் - உறவினர்கள் கூறினர்.

இதேசமயம், கொழும்பில் நேற்றுக் கைதானோரும் அங்கு கூட்டிவரப்படக்கூடும் என்பதால் அங்கு தடுத்துவைக்கப்படும் தமிழர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்ற அச்சமும் அங்கு நிலவுகின்றது.

## கண்ணீர் அஞ்சலி

### சின்னத்தம்பி தில்லைநடராசா

புலோலி தெற்கு ஸ்ரீமுதலி (மனோன்மணி) அம்பாள் ஆலயபரிபாலன சபையின் செயலாளராக கடமையாற்றி வந்தவரான *சின்னத்தம்பி தில்லைநடராசா* அவர்கள் (29.11.2007) வெள்ளிக்கிமை அன்று அகால மரண மடைந்துவிட்டார் அன்னாரின் மறைவுக்கு எமது ஆலய பரிபாலன சபையினதும் அடியார்களினதும் இதயபூர்வமான அஞ்சலியைச் செலுத்துவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பரிபாலனசபை, மனோன்மணி அம்பாள் ஆலயம், புலோலி.**

## மரண அறிவித்தல்



### முத்தையா சந்திரன்

மண்கும்பான் 4ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா சந்திரன் நேற்று (02.12.2007) ஞாயிற்றுக் கிழமை அகாலமரணமானார்.

அன்னார் முத்தையா-புவனேஸ்வரி தம்பதியினரின் மகனும், மகேஸ்வரியின் கணவரும், சஜித்தா (உபதபால் அதிபர், மண்கும்பான்), சங்கீதா, கவிதா, மாலினி (மாணவி, தொழில் நுட்பக் கல்லூரி, யாழ்.) ராதிகா, அருட்செல்வன் (மாணவன், புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை), றமா, ஜிந்துஷா (யாழ். இந்துமகளிர் கல்லூரி), அபினயா (வேம்படி உயர் கல்லூரி), அனோயா ( யாழ். இந்துமகளிர் கல்லூரி), கலைச் செல்வன் (ஆனைப்பந்தி மெதடிஸ் மிசன் வித்தியாலயம்) ஆகியோரின் தந்தையும், சர்வநாபனின் மாம னாரும், டிசானியின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (04.12.2007) செவ்வாய்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் சாட்டி இந்து மயா னத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*4ஆம் வட்டாரம், மண்கும்பான்.* — மனைவி, பிள்ளைகள், மருமகன்.


CHEMISTRY
புதிய பிரிவுகள்
A/L 2008
பௌதிக இரசாயனம்
ஆரம்பம்:- 06.12.2007
THU - 4.45 P.m
A/L 2009
வாயுக்கள்
A/L DAY
அசேதன இரசாயனம்
ஆரம்பம்:- 05.12.2007
WED - 1.00 P.m
By:-S.VASU
NAVALAR
ஆனைப்பந்தி, யாழ்நகர்.

CHEMISTRY
(Group Class)
2009 A/L
INORGANIC
M,T,W,T 6.15A.M
By: DIAS B.Sc. (Hons)
College of Chemistry
பழம் Rd., கந்தர்மடம்

BUSINESS ACADEMY
புதிய கல்வி ஆண்டு -2008
தரம் 01 முதல் O/L வரை
ஆரம்பம் 03.12.2007 (திங்கள்) பி.ப.4 மணி
சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை 566/1, காங்கேசன்துறை வீதி, யாழ்.

IIS
விண்ணப்பித்து விட்டீர்களா?
மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2008
அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க
விண்ணப்ப முடிவுத்திகதி 15-12-2007
வரை நீடிக்கப்பட்டுள்ளது.
அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.
கணணிக்கல்விக்கு தனித்துவம் மிக்க IIS இல்
இணைவதனூடாக கணணி உலகில் நீங்கள்
அங்கீகரிக்கப்படுகிறீர்கள்.
INSTITUTE OF INFORMATICS STUDIES
100,Clock Tower Road, Jaffna.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி கதிரவேலு இலட்சுமி

காரைநகர், களபூமி, தன்னையை சேர்ந்த கதிரவேலு இலட்சுமி நேற்று (02.12.2007) ஞாயிற்றுக் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி (சின்னப்பிள்ளை)-சிவக்கொழுந்து மீனாட்சியின் அன்பு மகளும், காலஞ்சென்ற முருகேசு கதிரவேலுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை சோமசுந்தரத்தின் (அப்புக் காத்து) மருமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (02.12.2007) ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர் களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
*55/7, சபாபதி ஒழுங்கை, தலையாழி, கொக்குவில்.* (68548) — ஆ.பாலசுப்பிரமணியம் (சகோதரன்)

### தம்பையா மயில்வாகனம் (சின்னத்துரை- ஆசாரியார்)

சுழிபுரம் பத்திரகாளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா-மயில்வாகனம் நேற்று (02.12.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பூமணியின் கணவரும், விஜயரத்தினத்தின் தந்தையும், பரமேஸ்வரியின் மாமனாரும், சிந்துஜா, லாவண்ஜா, யதுர்சன், கஜீபன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.12.2007) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*பத்திரகாளி கோயிலடி, சுழிபுரம்.* — மகன்-ம.விஜயரத்தினம் (சிற்பாசாரியார்)



### பாலசிங்கம் விஜயகுமார்

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த பாலசிங்கம் விஜயகுமார் நேற்று (02.12.2007) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கம் மகேஸ்வரி தம்பதியினரின் மகனும், கந்தசாமி-காலஞ்சென்ற சரஸ்வதி தம்பதியினரின் மருமகனும், இராஜலக்சுமியின் கணவரும், சதுர்சன் (யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி), சாரங்கா (யாழ். கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் தந்தையும், சந்தானகோபால் (கோபால்), சந்திரகுமார் (கனடா) ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.12.2007) பி,ப 1 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன்மணல் இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*நீதிராஜா வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில், (ஐயனார் கோவிலடி)* — குடும்பத்தினர்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.12.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org